ஆபத்திலிருந்து விடுதலை

போதகர் எம்.கே.சாம் சுந்தரம்

இவ்வுலகில் வாழும் மனிதன் பல்வேறு ...த்துக்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ...வேளைகளில் மனிதன் செய்வது என்ன? ...ன் மற்ற மனிதரிடமோ, வைத்தியரிடமோ, ...க்கறிஞரிடமோ, செல்வாக்கு நிறைந்த ...ரிகளிடமோ, ஞானிகளிடமோ, தீர்க்கதரிசி ...டமோ ஓடிச்சென்று உதவிகிடைக்காதா, ...று ஏங்குகின்றான். ஆனால், கிறிஸ்தவர் ...கிய நாமோ கர்த்தரைத் தொடர்புகொள்ளும் ...லைபேசி எண்ணான சங்கீதம் 50:15 உடன் ...டர்புகொண்டு, பரத்திலிருந்து உதவியைப் ...ற்றுக்கொள்ளவேண்டும்.

"ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் ...பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ ...ன்னை மகிமைப்படுத்துவாய்" (சங்கீதம் 50:15).

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ...லர்ப்படுக்கையன்று; ஏற்றத் தாழ்வுகள் ...றைந்த ஒரு பாதையாகும். இப்பாதை ...லநேரங்களில் மலையேறும் அநுபவமாகவும், ...ற்றுஞ்சில நேரங்களில் பள்ளத்தாக்கில் ...செல்லும் அனுபவமாகவும் காணப்படும். "ஏன் ...வ்விதப் பாதைகளில் என்னை நடத்துகிறீர்?" ...ன்று ஆண்டவரிடம் நாம் கேள்வி கேட்க ...டியாது. ஆபத்து வேளைகளில் நம்மை ...டுவிக்க, கர்த்தர் நம் பட்சத்திலிருக்கிறார் ...ன்பதை அறியவேண்டும்.

ஆபத்து நேரங்களில் மேற்காணும் ...சனமாகிய சங்கீதம் 50:15 ஐப்பற்றி ...தொலைபேசியில் தொடர்புகொள்வதுபோல) ...தவனிடம் தொடர்புகொள்ள வேண்டும். நமது ...புத்தியோ, சுயவல்லமையோ, சுயதிறமையோ ...ம்மை விடுவிக்காது. அவ்வேளைகளில் மனித ...தவியை நாடுவோமானால் சிக்கலையே ...ளுவோம். வேதவசனங்களைப் பற்றிப் பிடிப்போம். அதிசயங்களைக் காண்போம்.

உலகவாழ்வில் மனிதனுக்கு நேரிடும் எண்ணற்ற ஆபத்துக்களில் ஐந்துவிதமான ஆபத்துக்களையும், அவைகளினின்று விடுதலை பெறும் வழிகளையும் கீழே காண்போம். எந்த ஆபத்தான சூழ்நிலைக்கும் நாம் கலங்க வேண்டிய அவசியமில்லை. இயேசுவின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டு ஜெயம் பெறுவோம்.

ஆபத்துக் காலத்தில் விண்ணப்பங்களுக்குப் பதிலளிக்கும் தேவன்

"நாம் எழுந்து பெத்தேலுக்குப் போவோம் வாருங்கள்; எனக்கு ஆபத்து நேரிட்ட நாளில் என் விண்ணப்பத்துக்கு உத்தரவு அருளிச் செய்து, நான் நடந்த வழியிலே என்னோடே கூட இருந்த தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்குவேன் என்றான்" (ஆதி.35:3).

இச்செய்தி முழுவதும் தமிழ் வேதாகம மொழிபெயர்ப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதை அறிவீர்களாக.

"எனக்கு ஆபத்து நேரிட்ட நாளில் என் விண்ணப்பத்துக்கு உத்தரவு அருளிச்செய்து" என்றுள்ள யாக்கோபின் வாய்மொழி, தேவன் விண்ணப்பங்களுக்குப் பதிலளிக்கிறவர் என்பதைத் தெளிவிக்கின்றது. யாக்கோபு தன் மனைவிமார்களோடும் பிள்ளைகளோடும் தன் மாமனாரின் ஊரான பதான் அராமிலிருந்து கர்த்தருடைய வழிநடத்துதலின்படி, கானான் தேசத்திலுள்ள தன் தகப்பன் வீட்டிற்குத் திரும்பிய நேரத்தில் கூறிய சொற்கள் இவை.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

யாக்கோபுக்கு நேரிட்ட ஆபத்து என்ன? கீழுள்ள வசனங்களை வாசிப்போம்.

"யாக்கோபைத் தன் தகப்பன் ஆசீர்வதித்ததினிமித்தம் ஏசா யாக்கோபைப் பகைத்து: என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாட்கள் சீக்கிரமாய் வரும், அப்பொழுது என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்று போடுவேன் என்று ஏசா தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டான். மூத்த மகனாகிய ஏசாவின் வார்த்தைகள் ரெபெக்காளுக்கு (அவன் தாய்க்கு) *அறிவிக்கப்பட்டது. அப்பொழுது அவள் தன் இளைய மகனாகிய யாக்கோபை அழைத்து: உன் சகோதரனாகிய ஏசா உன்னைக் கொன்றுபோட நினைத்து, தன்னைத் தேற்றிக்கொள்ளுகிறான்"* (ஆதி.27:41,42).

இவ்வசனங்களை வாசிக்கும்போது, யாக்கோபின் நயவஞ்சகத்தை நாம் நன்கு அறிந்துகொள்ளலாம். பழைய ஏற்பாட்டின் காலத்தில் தகப்பன்மார் தங்கள் முதிர்வயதிலே மூத்தபிள்ளைகளை ஆசீர்வதிப்பது வழக்கம். ஆனால் இங்கு, இளைய மகனான யாக்கோபு, மூத்த மகனான ஏசாவைப்போல மாறுவேடம் பூண்டு, அவனுக்குரிய ஆசீர்வாதங்களைக் கள்ளத்தனமாகப் பெற்றுச்சென்றுவிட்டான். இதனை அறிந்த ஏசா கோபங்கொண்டு யாக்கோபைக் கொல்ல, சதித்திட்டம் தீட்டியிருந்தான். இதுவே தன் சொந்த சகோதரனால் யாக்கோபுக்கு நேரிட்ட ஆபத்து.

அப்போது யாக்கோபு தன் தாயின் சொற்படி, கானான் தேசத்திலிருந்து பதான் அராமிலிருந்த தன் மாமன் மகளைத் திருமணம் செய்துகொள்ள புறப்பட்டான். யாக்கோபு கானானிலிருந்து பதான் அராமுக்குப் போகும்வழியில் தனக்குண்டான அந்த ஆபத்து நேரத்தில் ஓரிடத்தில் இராத்தங்கினான். அவ்விடம் பெத்தேல் ஆகும். அங்குத் தேவன் அவனுக்குச் சொப்பனத்தில் தரிசனமானார். அந்தவேளையில் அவன் ஏறெடுத்த விண்ணப்பங்களைக் கீழே காண்போம்.

"அப்பொழுது யாக்கோபு: தேவ[ன்] என்னோடே இருந்து, நான் போகிற இ[ந்த] வழியிலே என்னைக் காப்பாற்றி, உண்[ண] ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் த[ந்து] என்னை என் தகப்பன் வீட்டுக்கு சமாதானத்தோடே திரும்பி வரப்பண்ணு[வீ]ரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்ப[ார்] (ஆதி.28:20,21).

"என்னை என் தகப்பன் வீட்டுக்கு சமாதானத்தோடே திரும்பிவரப்பண்ணு[வீ]ரானால்" என்றுள்ள யாக்கோபின் விண்ணப்பத்[தை] இங்குக் காண்கிறோம். அப்போது, அவன் ஒ[ரு] பொருத்தனையையும் பண்ணினான். தா[ன்] திரும்பிவரும்போது, பெத்தேலிலே தேவனு[க்கு] ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, அதை தேவனுடைய வீடாக ஆக்குவது மட்டுமன்[றி] தனது வருமானம் அனைத்திலும் தசமபாகத்[தை] செலுத்தப்போவதாகவும் பொருத்தனை பண்ணினான்.

யாக்கோபு பெத்தேலிலே அப்போ[து] ஏறெடுத்த விண்ணப்பத்தையும், அதற்கு தேவன் பதில்தந்த விதத்தையும் அவன் த[ன்] மனைவி, பிள்ளைகளோடு கானானுக்கு திரும்பும்வேளையில் நினைவுகூர்ந்தா[ன்] (ஆதி.35:3).

அன்பானவர்களே! உங்களைக் கொல்[ல] உங்களுடைய குடும்பத்தாரே சதித்திட்ட[ம்] தீட்டலாம்; உங்களது சத்துருக்களோ, பக்கத்து வீட்டாரோ, அன்றி உங்களோடு விருந்துண்ட[வர்] களோ, எக்காரணமுமின்றி உங்களுக்கு எதிரிகளாக மாறலாம். *"முகாந்தரமில்லாம[ல்] என்னைப் பகைக்கிறவர்கள் பெருகியிரு[க்] கிறார்கள்"* (சங்கீதம் 38:19) என்று தாவீ[து] கூறினது காண்க. ஆம், முகாந்தரமின்[றி] உங்களைப் பகைக்கிறவர்களை நீங்கள் காணலாம்.

கர்த்தர் இன்று உங்களுக்கு வாக்குத்தத்தம் கொடுக்கிறார். **"ஆபத்து வேளையிலே நீ விண்ணப்பஞ்செய்[யும்] போது, நான் உனக்குப் பதிலளிப்பே[ன்]**

என்கிறார். உங்களை, "அழித்துவிடுவேன்" என்று சொல்லுகிறவர்களினிமித்தம் பயத்தோடு காணப்படுவீர்களேயானால் இப்போது தைரியமடைவீர்களாக. "*ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்*" என்று கூறினவரோடு, சங்கீதம் 50:15 இன்படி, தொடர்பு கொள்ளுங்கள்.

ஆபத்துக்காலத்தில் ஆதரவு அளிக்கும் தேவன்

"*என் ஆபத்துநாளில் எனக்கு எதிரிட்டு வந்தார்கள்; கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார்*" (சங்கீதம் 18:18).

'*எனக்கு ஆதரவாயிருந்தார்*' என்ற தமிழ்ச்சொல்லுக்கு ஈடான ஆங்கில வேதாகமச் சொல்லைக் காணமுடியாது. தாவீது ஆபத்தின் வழியாகக் கடந்து செல்லுகையில், கர்த்தர் அவனுக்கு ஆதரவாயிருந்தார். 18 ஆம் சங்கீதத்தின் தலைப்பைப் பார்த்தால் இது நன்கு விளங்கும்.

'*ஆதரவு*' என்ற சொல்லின் பொருள் என்ன? தேர்தல் நடக்கும் நேரங்களில் பல கட்சிகள் போட்டியிடுவதுண்டு. அப்போது, இன்னின்ன வேட்பாளர்களுக்கு, இத்தனைபேர் ஆதரவாய் இருக்கின்றனர் என்று செய்தித் தாள்களில் நாம் காணலாம். அதாவது, இன்னின்ன வேட்பாளரை ஜனங்கள் விரும்புகின்றனர் என்பதை மறைமுகமாக விளக்குவர். அதுபோன்றே, தேவன் இங்குத் தாவீதுக்கு ஆதரவாயிருந்தார் என்று பொருள் கொள்ளுவதுதான் ஏற்புடையது.

சவுல் இஸ்ரவேலின்மேல் இராஜாவாயிருந்தபோது, தாவீது கோலியாத்தைக்கொன்று இஸ்ரவேலரை விடுவித்தான். இஸ்ரவேலர் தாவீதுக்கு ஆதரவாய் இருந்தனர். தாவீதை மக்கள் பாராட்டினர். அவனது புகழ் ஓங்கினதால் சவுல் தாவீதைப் பகைத்து, அவனைக் கொல்ல வகைதேடினான்.

"*பின்பு தாவீது: நான் எந்த நாளிலாகிலும் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன்; இனிச் சவுல் இஸ்ரவேலின் எல்லைகளில் எங்கேயாவது என்னைக் கண்டு பிடிக்கலாம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகும் படிக்கும், நான் அவன் கைக்கு நீங்கலாயிருக்கும் படிக்கும், நான் பெலிஸ்தரின் தேசத்திற்குப் போய், தப்பித்துக்கொள்வதைப் பார்க்கிலும் நலமான காரியம் வேறில்லை என்று தன் இருதயத்தில் யோசித்தான்*" (1 சாமுவேல் 27:1).

இவ்வசனம், தாவீது சவுலுக்குப் பயந்து ஓடினதைத் தெளிவிக்கின்றது. ஆம், சில வேளைகளில் நாம் பாராட்டப்படுவது, நமக்கே ஆபத்தை விளைவிக்கும். பொறாமைகொண்ட சவுல், தாவீதைத் தன் ஈட்டியினால் இருமுறை கொல்ல முயற்சித்தான்.

ஆகவே, தாவீது வனாந்தரங்களிலும் மலைகளிலும் சுற்றித்திரிந்து தன்னைக் காத்து வந்தான். **இதுவே தாவீதுக்கு ஏற்பட்ட ஆபத்து.**

இவ்விதம் பயந்து வாழ்ந்த தாவீதுக்கு, சவுல் மரித்தபின் இஸ்ரவேலர் ஆதரவாக மாறினர். "*கீசின் குமாரனாகிய சவுலினிமித்தம் (தாவீது) இன்னும் மறைவாயிருக்கையில், சிக்லாகிலிருக்கிற அவனிடத்திற்கு வந்து*" (1 நாளா.12:1) என்றுள்ள சொற்களினால், தாவீது இன்னமும் சவுலுக்குப் பயந்து, மறைந்து வாழ்ந்தான் என்பதை அறியமுடிகிறது. 1 நாளாகமம் 12 ஆம் அதிகாரம் முழுமையும் வாசிப்போமாயின், தாவீதுக்கு ஆதரவாளராய் மாறினவர்களின் பட்டியலைக் காணலாம்.

காத், பென்யமின், யூதா, இசக்கார், செபுலோன், நப்தலி கோத்திரத்தார் அனைவரும் தாவீதின் ஆதரவாளர்களாக வந்து, தாவீதின் பட்சத்தில் சேர்ந்ததை முறையே, 1 நாளாகமம் 12:8, 16, 18, 19, 38-40 வரையிலுள்ள வசனங்களில் காணலாம்.

இவ்வசனங்களைச் சங்கீதம் 18:18 ஆம் வசனத்தோடு இணைத்து வாசிப்போமாயின்,

ஆபத்துக்காலத்தில் கர்த்தர் தாவீதுக்கு எவ்விதம் ஆதரவாயிருந்தார் என்பதைக் காணமுடியும்.

அன்பானவர்களே! உங்கள் விசுவாசத்தைத் தட்டி எழுப்புங்கள். இவ்வாண்டில் நீங்கள் மனுஷரின் ஆதரவைத் தேடி, மக்களை உங்கள் பக்கமாய் ஈர்க்க, எங்கும் செல்லவேண்டிய அவசியமில்லை. மனிதரை முகஸ்துதி செய்யவோ, பணம்கொடுத்து ஆதரவு திரட்டவோ தேவையில்லை. தாவீதின் வழியை நீங்கள் பின்பற்றுங்கள். ஆபத்துக்காலத்தில் அவன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டது போல, நீங்களும் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்.

"... அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருக்கிறதைக் கண்டு, இஸ்ரவேலிலிருந்து திரளான ஜனங்கள் அவன் பட்சத்தில் சேர்ந்தார்கள்" (2 நாளாகமம் 15:9).

ஆசாவைக்குறித்துக் கூறும் வசனம் இது. தேவனாகிய கர்த்தர், 'ஆசாவோடிருக்கிறதை' ஜனங்கள் கண்டனர். இது ஓர் அற்புதமான சாட்சியன்றோ!

அருமை நண்பர்களே! கர்த்தர் உங்களோடிருப்பதை மக்கள் காணுவாராயின், அவர்களது ஆதரவு உங்களுக்குத் தானாகவே வந்துசேரும். ஆசா இராஜாவின் அனுபவம் உங்களது அனுபவமாக மாறட்டும். அப்போது மக்கள் உங்களுக்கு அடிபணிவர். ஆபத்துக்காலத்திலே ஆதரவு அளிக்கும் எண்ணான சங்கீதம் 5015 இல், தேவனோடு தொடர்பு கொள்ளுங்கள். ஆதரவைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஆபத்துக்காலத்திலே வெட்கத்திலிருந்து விடுதலையளிக்கும் தேவன்

"அவர்கள் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப்போகாதிருந்து, பஞ்சகாலத்திலே திருப்தியடைவார்கள்" (சங்கீதம் 37:19).

இது ஆபத்துக்காலத்திலே பெற்றுக் கொள்ளும் மூன்றாம் ஆசீர்வாதமாகும். தா... இவ்வாசீர்வாதத்தைப் பெற்று மகிழ்ந்த... வெட்கத்துக்கு எதிர்மறையான சொல் எ... தலைநிமிர்ந்து நடக்கவைக்கும் தைரி... அல்லவா?

தானியேல் 2 ஆம் அதிகா... முழுவதையும் வாசித்து அறியவும். பாபிலோ... தேசத்தை ஆண்ட நேபுகாத்நேச்சார் ... சொப்பனம் கண்டான். அதனை மற... விட்டான்போலும்! ஆயின், அச்சொப்ப... அவனைக் கலங்க வைத்தது. எனவே, ... சொப்பனத்தையும் அதன் பொருளை... விளக்கக்கூடிய ஞானிகளையும், ஜோசியரை... மந்திரவாதிகளையும் தன் அரமனை... அழைத்தான். அதைக் கூறுபவர்களுக்குப் ப... உண்டென்றும் அறிவித்தான். எ... ஜோசியராலும், ஞானியாலும் அதனை... கூறமுடியவில்லை.

"இதினிமித்தம் ராஜா மகா கோப... உக்கிரமுங்கொண்டு, பாபிலோனில் இருக்... எல்லா ஞானிகளையும் கொலைசெய்யும்... கட்டளையிட்டான்" (தானியேல் 2:12).

ஞானிகளான தானியேல், சாத்ரா... மேஷாக், ஆபேத்நேகோவும் இராஜாவி... இக்கொடுமையான கட்டளைக்குத் தப்பமு... வில்லை. தானியேலையும், அவன் நண்... களையும் கொலைசெய்யும்படி அவர்களை... தேடினார்கள். இதுவே, தானியேலுக்கு நேரி... ஆபத்து.

இராஜாவின் இக்கொடிய கட்டளை... காரணத்தை அறிந்த தானியேல், அதை... வெளிப்படுத்தத் தனக்குத் தவணை... கொடுக்குமாறு தன் அதிகாரிகளி... வேண்டினான். தானியேலும் அவ... நண்பர்களும், இராஜாவின் சொப்பனத்தை... அதின் அர்த்தத்தையும் வெளிப்படுத்துமா... தங்களது ஆபத்திலிருந்து விடுத... அருளுமாறும் தேவனை நோ... விண்ணப்பித்தனர்.

"பின்பு இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது; அப்பொழுது தானியேல் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்திரித்தான்" (தானியேல் 2:19).

தானியேலும் அவனது நண்பர்களும் ...ந்தசென்ற ஆபத்தில் வெட்கப்படாதவாறு தேவன் அவர்களுக்கு விடுதலை தந்தார். காரணம், தானியேல் தேவனை நோக்கிக் கூப்பிட்டான். சங்கீதம் 5015 இல், தேவனோடு தொடர்புகொண்டான். உடனே அவனுக்கு மறைபொருள் விளக்கப்பட்டது.

இராஜாவின் சொப்பனத்தையும், அதின் மறைபொருளையும் அவரிடம் எடுத்துரைத்தான் தானியேல். தேவன் தானியேலை வெட்கப்பட விடவில்லை. மாறாக, தலைநிமிர்ந்து தைரியமாக நடக்கப்பண்ணினார்.

அருமையானவர்களே! தானியேலின் தேவன் உங்கள் தேவன். சொப்பனத்துக்குரிய அர்த்தமட்டுமல்லாது, சொப்பனத்தையும் ...த்துக் கூறுவது எந்த மனிதனாலும் கூடாது. பாபிலோன் தேசத்திலுள்ள எல்லா ஞானிகளும் வெட்கப்பட்டுத் தலைகவிழ்ந்தனர். தேவனுடைய பிள்ளையாகிய தானியேலோ வெட்கமின்றி, தலைநிமிர்ந்து தைரியத்தோடு அதனை விளக்கினான். உங்களுடைய ஆபத்துக்காலத்தில் வெட்கப்பட்டுத் தலைகுனிய தேவன் விடமாட்டார். தலைநிமிர்ந்து நடப்பீர்கள். மறவாமல் சங்கீதம் 5015 இல் தேவனோடு தொடர்பு கொள்ளுவீர்களாக.

ஆபத்துக்காலத்திலே துணையாயிருந்து விடுதலை அருளும் தேவன்

"அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்" (சங்கீதம் 91:15).

'ஆபத்திலே நானே அவனோடிருந்து' என்றுள்ள வாசகத்தில், தேவனுடைய துணையைக் காணமுடிகிறது. தேவன் துணையாயிருந்து அநேகரை விடுவித்த செயல்களை வேதத்திலிருந்து காணலாம்.

மாற்கு 4:35 முதல் 41 வரையுள்ள வசனங்களை வாசிக்கவும். இயேசு கிறிஸ்து, தமது சீடர்களை நோக்கி, *"அக்கரைக்குப் போவோம் வாருங்கள்"* என்றார். அப்படகில் அவரும் ஏறியிருந்தார். அவர்களது பயணத்தின் பாதி தூரத்திலே பலத்த சுழல்காற்று உண்டாகி, படகு மூழ்கத்தக்கதாக அலைகள் அதின்மேல் மோதிற்று. அவரோ கப்பலின் பின்னணியத்திலே தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். சீடர்கள் பெரும் ஆபத்தைச் சந்தித்தனர்.

இயேசு கிறிஸ்து அவர்களுடனேகூட இருந்தும், சீஷர்களுக்கு விசுவாசமில்லை. அவரை எழுப்பி, *"போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள்."* இயேசு கிறிஸ்து எழுந்து, காற்றையும் கடலையும் அதட்ட, அமைதல் உண்டாயிற்று. சந்தோஷத்தோடே பயணம் செய்தனர்.

அன்பு சகோதரரே! நீங்கள் ஆபத்தில் மூழ்கும் நிலை ஏற்படும்போதும், தப்புவதற்கு வேறேதும் வழியில்லாமறபோகும்போதும், தேவன் உங்களுக்குத் துணையாயிருப்பார். "மரணம் சம்பவிக்கப்போகிறதே", "நான் ஆபத்தில் சிக்கியுள்ளேனே", "நான் மரிக்கப் போகிறேனே" என்று கலங்கவேண்டாம். தேவன் உங்களுக்குத் துணையாயிருந்து, ஆபத்திலிருந்து உங்களை விடுவிப்பார். விசுவாசிப்பீர்களாக. தொலைபேசி எண்ணான சங்கீதம் 5015 ஐ மறவாதிருப்பீர்களாக.

கொரிந்து பட்டணத்திற்குப் பவுல் அப்போஸ்தலன் சென்று சுவிசேஷம் அறிவித்த போது, தேவன் அவனுக்குத் தரிசனமாகி, *"நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே;...*

ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை'' என்றார். அப்போஸ்தலர் 18:9,10 வசனங்களில் இதனைக் காணலாம்.

"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்,'' என்று சங்கீதம் 46:1 இல் தேவன் வாக்களித்துள்ளார். ஆம், தேவன் நமக்குத் துணைமட்டுமல்ல, அநுகூலமான துணையுமானவர். விசுவாசிப்போமாக.

ஆபத்துக்காலத்தில் அமைதி அளிக்கும் தேவன்

"எனக்குச் செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் விக்கினமின்றி வாசம்பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான்'' (நீதி.1:33).

ஆபத்துக்காலத்திலே அமைதி காப்பதென்பது ஓர் அரிய காரியமாகும். ஆபத்தை மனிதன் சந்திக்கும்போது அவனது ஆவி, ஆத்துமா, சரீரம் நிச்சயமாய்த் தாக்கப்படும். அவன் சோர்ந்து போவது இயல்பு. ஆயின், இந்நாட்களில் ஆபத்து நேரங்களில் அமைதிகாக்கும் ஓர் ஆசீர்வாதத்தைத் தேவன் நமக்குத் தந்தருள்வார்.

அப்போஸ்தலர் 12:1 முதல் 16 வசனம்வரை வாசிக்கவும். ஏரோது இராஜா, யோவானின் சகோதரனான யாக்கோபைச் சிரச்சேதம் பண்ணினான். அது யூதருக்குப் பிரியமாயிருந்தது. மேலும் யூதரைப் பிரியப்படுத்த அவன் எண்ணி, பேதுருவையும் கொல்லும் நோக்கத்துடன் அவனைச் சிறையிலிட்டான். பஸ்கா பண்டிகைக்குப் பின்னர், சிறையிலிருந்து அவனை வெளியே கொண்டுவந்து, கொன்றுவிட எத்தனம் பண்ணிக்கொண்டிருந்தான். ஆதிச்சபையார் பேதுருவுக்காக ஊக்கமாக ஜெபித்துக் கொண்டிருந்தனர்.

"... பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக்கொண்டிருந்தான்'' (அப்.12:

இச்சம்பவத்தைச் சற்றே ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பீர்களாக. மேலோட்டமா இதனைப் படித்தால், அவன் தூங்கி கொண்டிருந்ததைமட்டும் காண்பீர்கள். பேது இரு சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்து நன்றாய்த் தூங்கிக்கொண்டிருந்தான். மறுநாளி கொல்லப்படப்போகும் ஆபத்தைச் சந்திக் இருந்தவன் முந்தின இரவில் தூங்குவானா தூக்கம்தான் வருமா? வரவே வராது.

ஆபத்தைச் சந்திக்க பேது அணுவளவும் பயப்படவில்லை. இ விந்தையிலும் விந்தையன்றோ! அவன் தனக்கு இவ்வாறு சொல்லிக்கொண்டிருந்திருப்பான் "நாளைக்கு நான் மரித்தாலும், நான் கவலை படமாட்டேன். பரலோகம் செல்வது எத்துணை பாக்கியம்! அங்குத் தொல்லையில்லை துன்பமில்லை; கண்ணீர் சிந்தி, கஷ்டப்பட் நான் பரலோகம் செல்ல அவசியமுமில்லை என்று எண்ணியிருந்திருப்பான்.

இதை வாசித்துக்கொண்டிருக்கு அன்பு சகோதரரே! தேவன் உங்களோடு பேசிக்கொண்டிருக்கிறார். **ஆபத்துக் காலத்திலே உங்களது உள்ளத்திலே சகலவி அமைதியையும் தேவன் இந்நாட்களில் த** போகிறார். உங்களுக்காகப் பாரங்கொள்ளு சபை மக்கள் உண்டு. ஆபத்திலே நீங்க செய்யவேண்டிய ஒரே ஒரு காரியமுண்டு சங்கீதம் 5015 இல், தேவனோடு தொட கொள்ளுங்கள். ஆபத்திலே ஆண்டவ உங்களுக்கு அமைதியைத் தருவார்.

ஆபத்துக்காலத்தின் ஐந்துவிதமா ஆசீர்வாதங்களை இதுவரை ஆராய்ந்தே ஆபத்திலே உங்களுடைய ஜெபத்திற்கு தேவன் பதில் அளிப்பார்; ஆபத்திலே நீங்க

வெட்கப்பட்டுப்போவதில்லை; ஆபத்திலே கர்த்தர் உங்களுக்குத் துணை நிற்பார்; ஆபத்திலே நீங்கள் அமைதிகாக்க தேவன் உதவுவார். இத்துணை ஆசீர்வாதங்களையும் இனிவரும் நாட்களில் பெற்றுநுபவிப்பீர்கள்.

அன்பானவர்களே! ஆசீர்வாதங்களை வேண்டுவோர் ஆபத்தை எதிர்நோக்குங்கள். ஆபத்துக்கள் என்றுள்ள ஒரு பெட்டகத்தைத் திறந்து பார்த்தால், ஆசீர்வாதங்கள் என்னும் அரும்பெரும் பொக்கிஷங்கள் கிடைக்கும். ஆகவே, ஆபத்தைக் கண்டு பயப்படாது, ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

கர்த்தர்தாமே உங்களுக்கு வேண்டிய கிருபைகளைத் தந்தருளுவாராக.

HE *is our* VICTORIOUS BANNER

Pastor M.K. Sam Sundaram

"And Moses built an altar, and called the name of it Jehovahnissi:" (Exodus 17:15).

Our Lord God has many names in Hebrew some of which are: Jehovah-Jireh, Jehovah-Nissi, Jehovah-Shalom, Jehovah -Shammah, Jehovah-Tsidkenu and Jehovah -Saboath. Jehovahnissi means 'The Lord is our victorious Banner'. A banner denotes victory and our Lord is the One who gives us victory in our life. Therefore, it is possible to lead a victorious Christian life, and the Word of God confirms it saying, *"Victory comes from the Lord."*

In proverbs 21:31 we read, *"The horse is prepared for the day of battle, but deliverance and victory are of the Lord"* (Amplified Bible). Before an invasion takes place, there is always a preparation for the battle. Similarly, we need to have a plan of action before we launch out on a project. But, the preparation alone does not ensure victory for us because, *"victory is of the Lord,"* and it is never achieved by our efforts.

In Rev.3:21 the Lord Jesus Christ speaks of His overcoming life while He was on this earth as a result of which He could be seated with His Father on His throne. He promises to make every one who leads an overcoming life sit with Him on His throne. What a beautiful promise!

The life of Apostle Paul proves the fact that it is possible to have victory in the life of a believer. Paul speaks of such a victory in II Corinthians 2:14 where he says, *"Now thanks be unto God, which always causeth us to triumph in Christ, and maketh manifest the savour of his knowledge by us in every place."*

Here Paul uses the words 'always' and 'in every place' which make it clear that you can claim and experience victory always and in every situation in your life.

There are some Christians who are victorious in some areas and some situations in their life and fail in some others. But, Paul the apostle says that God causes us to be always victorious, and not merely in a few

places and situations, but in every place and every situation.

As the word 'victory' correlates with the word 'battle' or 'war' or 'fight', we know that there can be no victory without a fight. The name 'Jehovah nissi' can be best understood only when the situation in which the Lord becomes our victorious banner is understood.

Let us see the first battle the children of Israel fought while they were on their journey to possess the land promised to them.

AMALEK FOUGHT WITH ISRAEL

"Then came Amalek, and fought with Israel in Rephidim" (Exodus 17:8).

All the tribes of Israel set out from the wilderness of Sin and travelled by stages as the Lord directed. They encamped at Rephidim, and when there was no water for them to drink, the Lord did a miracle and gave them water.

Then the Amalekites came against Israel and fought with them at Rephidim. The Christian life can be compared to the journey the Israelites took from Egypt after crossing the Red Sea to the land of Canaan. Just as the people had to face battles, Christians also have to fight against their spiritual enemies, namely, the world, the flesh and Satan. There is a constant war going on and believers can be victorious only if they have a sound mind and are determined to subdue their enemies the chief of whom is Satan.

The battle between Israel and Amalek is analogous to our own constant ba against our spiritual enemies. We do not fi against human foes but against cosmic po ers, against authorities and potentates of darkness of the material world and a against the superhuman forces of evil in heavenly realms (Ephesians 6:12).

Apostle Peter makes a plea to people of God to abstain from the lusts the flesh which war against the soul (I Pe 2:11). The fact that you have confessed yo sin, received forgiveness of sin and accep Jesus as your Saviour does not assure yo place in heaven if you do not keep the w ring passions of your flesh under cont There is a possibility of your falling into p sumptuous sins even in the last leg of yo spiritual race. Therefore, beware of Sata cunning devices to make you fall from grace of God.

Now, listen to what Apostle John s in I John 2:16-17: *"For all that is in world, the lust of the flesh, and the lust the eyes, and the pride of life, is not of Father, but is of the world. And the wo passeth away, and the lust thereof: but that doeth the will of God abideth for eve*

Let us therefore be cautious not succumb to the temptations of worldly ple sures and the lusts of the flesh and not give room for pride in our life but do will of God and lead a victorious life.

SELECT SOME MEN

"And Moses said unto Josh Choose us out men, and go out, fight w Amalek: tomorrow I will stand on the

of the hill with the rod of God in mine hand" (Exodus 17:9).

There are a few steps to achieving victory. Here we see how Moses instructs Joshua to select the right men who will go out and fight with Amalek. He says that he, on his part, will stand on top of the hill with the rod of God in his hand. Moses' instruction to Joshua was specific. Joshua was not to choose those he liked, nor the ones who were willing. He was to use his discretion in the selection of men who would fight and win.

The word 'choose' (select) used in this verse should open our eyes of understanding. Although there are millions of believers in this world, not all are chosen. God has chosen His own band of people who are like-minded and who will fight for His cause.

Jesus reaffirmed this truth when He said, *"Ye have not chosen me but I have chosen you, and ordained you, that ye should go and bring forth fruit, ..."* (John 15:16). Jesus has chosen us so that we can bear fruit. Only when we live in Christ can we bear fruit for Him. 'Abiding' or 'living' in Christ means having a very close relationship with Him. Just as the branches of the vine, when cut off, cannot bear fruit, so also one who does not dwell in Jesus Christ and has no communion with Him is barren in spiritual life. Consequently, such people cannot have victory in their spiritual warfare.

The Lord, who has chosen us, exercised His choice even before the foundation of the world. It is His desire that His people should be holy as He is, and also blameless and without spot or wrinkle. Examine yourself if you are in the chosen group. If you are, see that you are in fellowship with Him and your standards of holiness measure up to His expectations. Then you can have victory in your spiritual life.

ON THE TOP OF THE HILL

"... tomorrow I will stand on the top of the hill with the rod of God in mine hand" (Exodus 17:9).

The next step to spiritual victory is the arduous task of climbing up a hill and reaching its top. In this task you should follow the leader. As he climbs up the hill, you follow him to the top. This climbing up the hill represents your heavenly-mindedness, your prayer life and your unity or fellowship with your leader.

Once, the Lord Jesus led Peter, James and John up a high mountain to pray. Similarly, we see Moses taking Aaron and Hur with Him to the top of the hill while he sent Joshua to fight with Amalek.

When you have to face the enemy, you should gather together as a group and pray. There may come situations in your life wherein you may find yourself facing stiff opposition or challenges and at such times it will be worthwhile getting together as a group to pray. The fervent and united prayer of the group will certainly bring answers from God.

Here is an example from Scripture: Nebuchadnezzar the king of Babylon had a

dream, and being unable to remember it, he called all the astrologers, magicians and diviners in his kingdom and commanded them to give him the dream as well as its interpretation failing which they would be put to death. None of the king's magicians and diviners could do it. But the four Hebrew youngmen—Daniel, Shadrach, Meshach and Abednego—who were exiles in Babylon got together and prayed. As a result of united prayer God revealed the dream and its meaning to Daniel in a vision by night.

THE ROD OF GOD

"... tomorrow I will stand on the top of the hill with the rod of God in mine hand" (Exodus 17:9).

This is another step to victory for God's people. Moses told Joshua to fight Amalek, while he would go up the hill with the rod of God in his hand. The rod which he took with him was not his own but God's. Originally, the rod belonged to Moses as we read in Exodus 4:2.

When God wanted him to go to Egypt and tell Pharaoh to let His people journey to the wilderness and offer Him sacrifices, Moses gave Him excuses. Since Moses was grazing his father-in-law's sheep near Mount Horeb where God met him in a burning bush, he had a shepherd's staff in his hand. The Lord God did a couple of miracles with it and asked him to do the same with the rod in order to convince the people of Israel that He had appeared to him. Thus God changed the nondescript rod which was in Moses' hand into a rod of power and authority by empowering it.

When you give God what you have in your hands, He will make you powerful, and give you a miraculous victory.

Moses realized the seriousness of going up the hill empty-handed when the fight was raging on. He took the rod of God with him, and we see how the rod became instrumental in Joshua winning a victory over Amalek.

Some people do not comprehend the seriousness of facing their enemy without a weapon. The sword, like the rod in Moses' hand, is what every one of us needs when we are confronted with the evil one. The Word of God is the sword which is powerful like the rod of God, and that alone can rout the enemy. The Bible is the rod of God, and carrying it with you (having the Word imprinted in your heart) is as essential as carrying a sword or a weapon of war to the battlefield.

Jesus Christ did not stop with saying *"All power is given unto me in heaven and in earth"* (Matthew 28:18) but also said *"Behold, I give you power... over all the power of the enemy"* (Luke 10:19): Jesus has given us His power so that we can be victorious over our greatest enemy the evil one. He has anointed us with the power of the Holy Spirit. To wield power and authority over the enemy you should take the rod of God as Moses did when he went to the top of the hill.

JOSHUA DID AS MOSES HAD SAID TO HIM

"And Moses said unto Joshua, Choose us out men, and go out, fight with Amalek: ...

So Joshua did as Moses had said to him, ..." (Exodus 17:9 and 10).

Verse 10 speaks of Joshua's obedience which is the next step to victory. In v.9 we read that he was asked to "*Choose out men*" and go and fight with Amalek. And in the next verse we read, "*So Joshua did as Moses had said to him, and fought with Amalek:*"

Rarely do we find such obedience in people who call themselves believers. When the Lord gives them a command through a servant of God, they are unwilling to obey Him. There are instances in the Bible which show how people lost the blessings of God by their disobedience. But, here we see Joshua being so faithful to God that he followed to the letter the command of God given to him by Moses. We read in Joshua 11:15, "*As the Lord commanded Moses his servant, so did Moses command Joshua, and so did Joshua; he left nothing undone of all that the Lord commanded Moses.*" From this verse we understand that by being obedient to Moses, Joshua was, in fact, obedient to God, because it was God who gave the command to him through Moses.

Children of God, be careful to obey servants of God who are His representatives through whom God gives His instructions and commands. Do not lose your spiritual victory by your disobedience.

MOSES SAT ON A STONE

"*But Moses' hands were heavy; and they took a stone, and put it under him, and he sat thereon*" (Exodus 17:12);

As the battle between Israel and Amalek progressed, Moses raised his hands. Whenever his hands were raised,Israel had the advantage, and when he lowered his hands, the advantage passed to Amalek. Moses' hands sagged as they grew heavy, and therefore, Aaron and Hur took a stone and put it under him. As Moses sat on it, Aaron and Hur held up his hands, one on either side, so that his hands remained steady till sunset. Eventually, Joshua defeated Amalek and killed the people with his sword.

The stone on which Moses sat stands for Jesus Christ, the Chief Corner Stone. He is a tried Stone, and also a living Stone. When you depend on Jesus the Stone, you get strength which you need for living a victorious Christian life.Without Him you can have no strength even to stand. Since He is a solid Rock, you can lean on Him. He will strengthen you and give you victory in your spiritual battle.

THE EDGE OF THE SWORD

"*And Joshua discomfited Amalek and his people with the edge of the sword*" (Exodus 17:13).

Joshua defeated Amalek and killed the people with his sword.The sword that Joshua used was a weapon of war which, in ancient days, was used in warfare. In your spiritual warfare the sword that you should use is the Word of God. The enemy cannot be overcome by any other means, and Jesus Himself wielded only this weapon when the enemy came to tempt Him. Jesus never argued with the devil saying that He was the Son of God, nor did He try to prove His

divine powers by His actions. All He did was to quote apt verses from Scripture and, by doing so, He put the enemy to flight.

The only way to be victorious in your spiritual life is by committing to memory verses from Scripture. When you have a repertoire of verses imprinted in your heart, you can freely draw from it and use the weapon against the enemy when he comes against you.

Joshua defeated his enemy and killed the Amalekites by using a sword. In a similar manner, you can overcome your greatest enemy the devil by the sword of the Spirit that Apostle Paul speaks of in Ephesians 6:17, *"... and the sword of the Spirit, whic[h] is the word of God:"*

After Joshua routed and killed th[e] Amalekites Moses built an altar and calle[d] it *"Jehovahnissi"*.

It is God's desire that we should re[-]member the victories He has given us in ou[r] life. He told Moses to write about Israel'[s] victory over Amalek in a book so that [it] could be a memorial.

Are you thankful to the Lord for al[l] the victories He has given you? Praise Him[,] thank Him and testify for His glory, for He is Jehovahnissi—your victorious Banner.

ஊழியர் பகுதி

சாது சுந்தர்சிங்

தொடர்ச்சி

கள்வர்களோடு

ஒருநாள் சுந்தர் சிங் காட்டு வழியாய்ச் சென்றுகொண்டிருந்தார். மரங்களும், புதர்களும் அடர்ந்த வழியில் நடந்துகொண்டிருந்தபோது நான்கு காட்டுத் திருடர்கள் இவரை வழிமறித்தனர். வழிப்போக்கர்களை மிரட்டி, கொள்ளையிடுவது அவர்களின் வழக்கம். அன்று சாது அவர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

இவரை மிரட்டிப் பேசிக்கொண்டே இருக்கும்போது, ஒருவன் கத்தியை எடுத்து சாதுவின் தலைக்கு நேராய் எறிந்தான். நல்லவேளை அவர் குனிந்ததால் கத்தி வெட்டுக்குத் தப்பிவிட்டார். இந்த நால்வரில் ஒருவன் இரக்கப்பட்டு இவரைக் கொலை செய்யவேண்டாம். இவர் காவி உடையில் இருக்கிறார். இவரை உயிரோடு விட்டுவிடலா[ம்] என்றான்.

"ஆளை விட்டுவிட்டு, பணம் இருக்கிறத[ா] என்று பாருங்கள். இந்த மனிதனை[க்] கொல்வதால் நமக்கு லாபம் ஒன்றும் இல்லை" என்றான் மற்றொருவன்.

சுந்தரிடம் பணமில்லை என்[று] அறிந்ததும் அவரிடமிருந்த கம்பளியை உருவி இழுத்துக்கொண்டுபோய்விட்டார்கள். சுந்தரோ வேறு வார்த்தை எதுவும் பேசாமல் உயிரைமட்டும் விட்டுவிட்டார்களே, அதுவே போதுமென்று நடக்க ஆரம்பித்தார்.

சற்று நேரத்திற்கெல்லாம், அந்த நான்கு திருடர்களும் சுந்தரைப் பின்தொடர்ந்து வந்தனர். திரும்பிப் பார்த்த சாது, இனி நா[ம்] அவ்வளவுதான், தப்பிக்கவே முடியாது என்[று]

வுக்கு வந்தார். அவரை அழைத்தவர்கள் ருகில் வந்து, "நீ யார்? எங்கிருந்து கிறாய், எதற்காக இவ்வழியே போகிறாய்" றெல்லாம் வினவினார்கள்.

சாதுவோ, "நான் ஒரு கிறிஸ்தவ சாது; யேசு நாதரின் ஊழியன்" என்று சொல்லி, னிடம் இருந்த புதிய ஏற்பாட்டைத் திறந்து டினார். இதுதான் வசனம் சொல்ல நல்ல மென்று எண்ணி, அப்புத்தகத்திலுள்ள சருவும் ஐசுவரியவானும் என்றுள்ள பவத்தை வாசித்துக் காட்டினார். அதைக் டுக்கொண்டிருந்த நால்வரையும் பார்த்து, தைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" று கேட்டார். அவர்களில் ஒருவன், "அந்த வரியவானின் முடிவு எனக்குப் பயம் டாக்குகிறது" என்றான். மற்றொருவனோ, றிது குற்றம் செய்தவனுக்கே இவ்வளவு ரிய தண்டனையானால் பெரும் பாதகராகிய களைப் போன்றவருக்கு என்ன கதியோ?" றான்.

கோபத்தோடும் முரட்டுக் குணத்தோடும் ருந்தவர்கள், குளிர்ந்து தயக்கத்துடன் பேச ரம்பித்தார்கள். எப்படியாவது தேவன் வர்களோடு பேசவேண்டுமென்று நினைத்த து. இவர்களோடு வேத வசனத்தையும் யேசுவைக்குறித்தும் கூறிக்கொண்டே ந்தார். கல்வாரிப் பாடுகளையும் தேவனுடைய ன்பின் இரக்கத்தையும் விவரித்துக்கொண்டே ந்தார். அவர்களின் மனம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைய ஆரம்பித்தது.

ஒருவன் தனது குற்றம் தாளமுடியாது னம் உருகி அழத்துவங்கினான். தனது கொடூரங்களையும் பாவத்தையும் வெளிப் படையாகச் சுந்தரிடம் அறிக்கையிட்டான். அவர்கள் சுந்தரோடு அன்பாகப் பேசி, தாங்கள் ருந்த குகைக்குள் அழைத்துப்போனார்கள். அன்றிரவு உணவு சமைத்து இவருக்குமுன் கொண்டுவந்து வைத்து, சாப்பிடும்படி கேட்டுக்கொண்டனர். அன்றிரவு முழுவதும் அவர்கள் பேசிக்கொண்டிருந்து, பின் விடியலில் உறங்கச் சென்றுவிட்டனர்.

அடுத்தநாள் காலையில் அவர்களில் ஒருவன் சுந்தரை எலும்புகளும் மண்டை ஓடுகளும், பிணக்குவியல்களும் உள்ள ஒரு குகைக்கு அழைத்துக்கொண்டுபோனான். சுந்தருக்கு ஒன்றும் புரியவில்லை. எல்லாவற்றையும் காட்டி, "ஐயா இதோ, பார்க்கிறீர்களே, இந்தப் பிணங்களெல்லாம் என்னால் கொலை செய்யப்பட்டவை. இப்பூமியில் நன்றாக வாழ்ந்திருக்க வேண்டியவர் களைச் சாகடித்தேன். என்னையும் அந்தத் தெய்வம் ஏற்றுக்கொள்வாரா?" என்று கேட்டான். "ஏற்றுக்கொள்வார்" என்றார் சுந்தர்.

"ஐயா, அதோ பாருங்கள், எலும்புக் கூடுகளையும் மண்டை ஓடுகளையும். அவர்களெல்லாம், என்னால் பல வருடங் களுக்குமுன் அநியாயமாய்க் கொலை செய்யப் பட்டவர்கள்; வழிப்பறியில் துன்புறுத்தப்பட்டு உயிரை இழந்தவர்கள், அவர்களிடம் களவாடிய பொருள்களெல்லாம் இங்கே இருக்கின்றன. இப்படிப்பட்ட கொடும் பாவியாகிய என்னை, நீர் வழிபடும் அந்தத் தெய்வம் ஏற்றுக் கொள்வாரா?" என்றான். "ஏற்றுக்கொள்வார்" என்று அமைதியாய்ப் பதில்சொன்னார் சுந்தர் சிங்.

இதைக் கேட்டதும் அவன், 'ஓ'வென்று அழுது தன் பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டான். சிலுவை நாதரை நோக்கிப் பார்த்து மன்றாடினான். அதே இடத்தில் இருவருமே ஜெபித்தார்கள். இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டவனாய், தன் வாழ்க்கையை ஆரம்பித்தான். சிலநாட்கள் சென்றபின் லாப்கா என்ற இடத்திலுள்ள மிஷனெரிகளைக் கண்டு அவர்களிடம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். அவனுடைய மூன்று நண்பர்களுங்கூட திருந்தி, நல்ல குடிமக்களாக வாழ்ந்து வரலாயினர்.

கிறிஸ்தவர் மத்தியில் எழுப்புதல்

கிறிஸ்தவர்கள் மத்தியில் சாது சுந்தர் சிங் மிகவும் பரவலாகப் பேசப்பட்டார். 1912 ஆம் ஆண்டுகளிலெல்லாம் கிறிஸ்தவர்களின் உற்சாக நாட்களாக இருந்தன. வைராக்கியமான சீக்கிய குடும்பத்திலிருந்து ஒருவர் ஆண்டவராகிய இயேசுவை உயர்த்தி, அவருக்கு ஊழியஞ் செய்கிறாரென்றால் அது கிறிஸ்தவர்களுக் பெருமை கொடுப்பதாய் இருந்தது. சபை இவரை வரவேற்றன. பெரிய பரிசுத்தவா இவரையும் தங்களின் ஐக்கியத்தில் அங்கமாக அங்கீகரித்துக் கொண்டனர். இ திரளான மக்கள் கூடும் கூட்டங்களில் செ கொடுக்க அழைக்கப்பட்டார். (தொடரு

வேதபாடம்

உன்னதப்பாட்டு

பாடம் 22 (தொடர்ச்சி)
(உன்னதப்பாட்டு 6:2,3)

"தோட்டங்களில் மேயவும், லீலிபுஷ்பங் களைக் கொய்யவும், என் நேசர் தமது தோட்டத்துக்கும் கந்தவர்க்கப் பாத்திகளுக்கும் போனார்" (உன்.6:2).

எருசலேம் குமாரத்திகள் கேட்ட கேள்விக்கு மணவாட்டி அளிக்கும் பதிலை இவ்வசனத்தில் காண்கிறோம். தோட்டங்களில் மேய, தன் நேசர் போயிருப்பதாகக் கூறினாள். முந்தின நாட்களில் தன் நேசரோடே தான் தனித்து, ஐக்கியங்கொண்டிருந்த நேரத்தில் தனக்குக் கிட்டின மகிழ்ச்சியின் அநுபவங்கள் அவளது கண்முன்னர் வந்து நின்றன. *"என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து, தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக"* என்று கூறின தனது சொற்களை மீண்டுமாக நினைவுகூர்ந்தாள். *"நான் என் தோட்டத்தில் வந்தேன்"* என்றுரைத்த நேசரின் சொற்களும் அவளது காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தன. இவ்வாறு நேசரில் மகிழ்ந்து பூரித்துக் கொண்டிருந்த அவள், அந்த இரவுவேளையில் தன் நேசரை அத்தோட்டத்தில் தனித்து விடுத்து, இளைப்பாறத் தன் அறைக்குள் சென்றமையால், தன் நேசரோடுள்ள ஐக்கியத்தில் அவளுக்கு ஒரு பிளவு ஏற்பட்டுவிட்டதை உணர்ந்தாள்.

இரவில் பெய்த பனித்தூறலின நனைந்த தலைமுடியுடன் நே மணவாட்டியின் அறைக்கு வந்து, கதவை தட்டினார். அவளோ அவரோடு இரவி பாடுகளைச் சகிக்க விரும்பவில்லை. அதன நேசருக்குக் கதவைத் திறவாமல் பலவிதம சாக்குப்போக்குகளைக் கூறினாள்; நேச போய்விட்டார். அதனால், அவரை இழந் தவித்தாள்.

எனினும், பின்னர் அவள் த குறைகளை உணர்ந்துகொண்டாள். அவ குறித்துள்ள அன்பின் வர்ணனைகளை எருசலே குமாரத்திகளிடம் கூறினாள். அவரோடு பா சகிக்க விரும்பாது அவரை இழந்ததால், தா அவரை விட்டு வந்த இடத்தை அவள சரியாக நிதானிக்க முடிந்தது. *"தோட்டங்களி மேயவும், லீலி புஷ்பங்களைக் கொய்யவு என் நேசர் தமது தோட்டத்துக்கும் கந்தகவர்க பாத்திகளுக்குப் போனார்"* என்று அவர்களி கூறினாள்.

'தோட்டங்களில் மேய' என்று சொற்கள் தேவ சபையைக் குறிக்கிறது. நே தமது மணவாட்டியை (சபையை), *அடைக்கப்பட்ட தோட்டம்"* என்று உன்ன பாட்டு 4:12 இல் கூறியுள்ளார். *"அவர் தம அருமையான கனிகளைப் புசிப்பாராக"* என் மணவாட்டி உன்னதப்பாட்டு 4:16 இ

...யுள்ளாள். கனிகள் நிறைந்த சபையைத் ...வன் விரும்புகிறார் என்பதை இது ...ருள்படுத்துகிறது.

"அதின் வனாந்தரத்தை ஏதேனைப் ...லவும், அதின் அவாந்தரவெளியைக் ...த்தரின் தோட்டத்தைப்போலவும் ...குவார்;..." (ஏசாயா 51:3). *"நீ நீர்ப்பாய்ச்சலான ...டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப் ...லவும் இருப்பாய்"* (ஏசாயா 58:11). ஆம், ... கனிகள் நிறைந்த தோட்டத்துக்கு ...டப்பட்டுள்ளது. சபையில் நேசர் கனிகளை ...ர்பார்க்கிறார் என்பதை இவ்வசனங்கள் ...ப்படுத்துகின்றன.

கனியில்லாத அத்திமரத்தை இயேசு ...ண்டு சபித்தது, தமது கோபத்தினாலன்று; ...தில் கனியை எதிர்பார்த்ததினால்மட்டுமே. ...யேசு கிறிஸ்து தம் சபையில் கனியற்ற ...மாலக்காரர் வாழ்வதை விரும்புகிறதில்லை ...த்தேயு 21:33-43; லூக்கா 13:6 வசனங்களை ...சிக்கவும்). கனியற்ற தோட்டமாகிய ...பைக்கு அவர் வருவதனால் என்ன பயன்?

ஆவியின் கனியாகிய அன்பு, ...தோஷம், சமாதானம், நீடியபொறுமை, ...வு, நற்குணம், விசுவாசம், சாந்தம், ...ச்சையடக்கம் (கலா.5:22,23) இவைகளை ...விசுவாசிகளாகிய நம்மிடத்தில் தேவன் ...திர்பார்க்கின்றார். திராட்சச்செடியாகிய ...கிறிஸ்து இயேசுவுக்குள் நிலைத்திருப் ...போமாயின் ஆவியின் கனியைத் தரும் ...கொடிகளாக நாம் விளங்குவோம் (யோவான் 15:1-5; யாக்கோபு 5:7 வாசிக்கவும்); ...னிதரும்போது நேசரை இழந்து தவிக்க ...ட்டோம்; நிச்சயமாக அவரைக் காண்போம்.

"லீலிபுஷ்பங்களைக் கொய்யவும்" (உன்.6:2),

லீலிபுஷ்பங்கள் எங்கே காணப் ...படுகின்றன? பள்ளத்தாக்குகளில் காணப் ...படுகின்றன. விசுவாசிகளின் பள்ளத்தாக்கின் ...வாழ்க்கை, தாழ்மையின் வாழ்க்கையைக் குறிப்பிடுவதாகும். லீலிபுஷ்பங்களைக் குறித்து நாம் முன்னரே கற்றுள்ளோம். அவை முட்களுக்குள்ளே காணப்படுபவை.

காற்று வீசும்போது அந்தப் புஷ்பங்கள் முட்களால் குத்தப்படுகின்றன. இது கிறிஸ்தவ வாழ்க்கையில் சபை மக்களின் பாடு அநுபவிக்கும் ஜீவியத்தைக் காட்டுகின்றது. ஆம், நாம் நம் நேசரோடே எப்போதும் காணப்பட வேண்டுமானால், இப்பூவுலகில் தாழ்மையை அணிந்தவர்களாகவும் அவரோடு பாடு அநுபவிக்கிறவர்களாகவும் காணப்படவேண்டும்.

'லீலி புஷ்பங்களைக் கொய்யவும்' என்பது பாடுகளினால் பரிசுத்தமாக்கப்பட்ட பரிசுத்தவான்களைத் தம்முடைய வருகையில் எடுத்துக்கொள்வதையும் சுட்டிக்காட்டுகின்றது. 1 பேதுரு 5:5 முதல் 10 வரையுள்ள வசனங்களை வாசிக்கவும்.

*"நீங்கள் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள். ... தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். **தமது நித்திய மகிமைக்கு அழைத்தவரா யிருக்கிற** தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி..."* (1 பேதுரு 5:5,10).

இவ்வசனங்கள் தாழ்மையை அணிந்து நாம் ஜீவிக்கவேண்டும் என்றும், கிறிஸ்தவ வாழ்க்கையில் உண்டாகும் பாடுகளைச் சந்தோஷமாகச் சகிக்கவேண்டும் என்றும், தமது நித்திய மகிமைக்கு நம்மைத் தேவன் அழைத்திருக்கிறார் என்றும் விளக்குகின்றன. ஆம், லீலிபுஷ்பங்களைப்போன்று பாடுபடும் சபை விசுவாசிகளை மத்திய ஆகாயத்திலே எடுத்துக்கொள்ள நேசர் நிச்சயம் வருவார். *"லீலிபுஷ்பங்களைக் கொய்ய, நேசர் தோட்டத்திற்குப் போனார்"* என்பதன் கருத்து இதுவேயாகும்.

"கந்தவர்க்கப் பாத்திகளுக்குப் போனார்" (உன்6:2).

பழைய ஏற்பாட்டின் காலத்தில்

ஆசரிப்புக் கூடாரத்தின் பணிமுட்டுகளில் அபிஷேகதைலமும் ஒன்று. அதனை உருவாக்க, கந்தவர்க்கங்கள் தேவைப்படும். இது ஜெபிக்கிற, துதிக்கிற வாழ்க்கையை விளக்குகின்றது. தேவ சபையார் அபிஷேகத்தால் நிறைந்து, ஜெபத்தையும் துதியையும் ஒருங்கே தூபம்போன்று ஏறெடுக்கிறவர்களாய்க் காணப்படவேண்டும். கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனையை வீசுபவர்களாக, ஜீவிக்கவேண்டும். கிறிஸ்துவுக்கு நற்கந்தமாய் விளங்கவேண்டும் (2 கொரிந்தியர் 2:14,15). இத்தகைய பரிசுத்த விசுவாசிகளைத் தம்மோடிருக்கும்படி அழைத்துச் செல்ல, இயேசு கிறிஸ்து தமது சபைக்கு (தோட்டத்திற்கு) வருவார்.

மணவாட்டியாக அழைக்கப்பட்ட விசுவாசிகளே! உங்களது நேசரை நீங்கள் எங்கே தவறவிட்டீர்கள்? அவரோடுள்ள ஆதி அன்பிலே நிலைத்திருக்கிறீர்களா? அவரோடு இணைந்து பாடு அநுபவிக்க வேண்டிய காலத்திலே, சோம்பலினால் தூங்கிக்கொண்டிருக்கிறீர்களா? அவர் உங்களை அழைக்கும் வேளைகளில் அவரைத் தேடாது, சாக்குப் போக்குச் சொல்லுகிறீர்களா? அவருக்காகக் கனிகொடுக் கிறீர்களா? தாழ்த்த வேண்டிய நேரத்தில் உங்களைத் தாழ்த்துகிறீர்களா? அபிஷேக தைலத்தால் நிரம்பி வாழ்கிறீர்களா? ஜெபமும் துதியும் தூபம்போல் உங்களுடைய வாழ்க்கையிலே காணப்படுகின்றதா? நீங்கள் எவ்விடத்தில் நேசரைவிட்டுவிட்டு இளைப்பாற வந்தீர்கள் என்பதை நீங்கள் அறியமுடியுமா? கிறிஸ்தவ வாழ்க்கையிலே மீண்டும் அவரைத் தேடிக் கண்டுபிடிக்க, இன்றே தீர்மானிப்பீர்களாக.

"நான் என் நேசருடையவள், என் நேசர் என்னுடையவர்; அவர் லீலிபுஷ்பங்களுக் குள்ளே மேய்கிறார்" (உன்.6:3).

"என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள், அவர் லீலிபுஷ்பங்களுக் குள்ளே மேய்கிறார்" (உன்.2:16).

இந்த இரு வசனங்களை ஒற்றுநோக்கு போது, வரிசைக் கிரமத்தில் ஒரு வித்தியாசத்தை காணலாம். உன்னதப்பாட்டு 2:16 இல், *"என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவ[ள்]"* என்று அவள் கூறினாள். உன் 6:3 இல், *"நா[ன்] என் நேசருடையவள், என் நே[சர்] என்னுடையவர்"* என்று மாற்றிச் சொல்லுகிற[ாள்].

உன்னதப்பாட்டு 2:16 வசனத்தின்ப[டி] அவளுக்குள் ஒரு மகிழ்ச்சி காணப்பட[்ட] போதிலும், அது, அவளது வெளியரங்கமா[ன] உணர்ச்சிவசப்பட்ட அன்புதான். "அவ[ர்] எனக்குச் சொந்தம், அவர் என்னைக் கைவி[ட] மாட்டார், அவர் என்னோடு இருக்கிறா[ர்]" என்றுள்ள திருப்திமட்டும் அவளுக்கு இருந்தது.

ஒரு பொருள், "எனக்குச் சொந்த[ம்]" என்று உணரும்போது, உள்ளத்தில் மகிழ்[ச்சி] ஏற்படினும், அது ஒரு மேம்பட்ட அநுபவமல்[ல]. இவ்விதமான ஒரு குறைந்த அநுபவமே முதற்கண் மணவாட்டியிடம் காணப்பட்ட[து]. இது முற்றிலும் நேசருக்கு அர்ப்பணிக்கப்ப[ட்ட] ஒரு வாழ்க்கையின் மகிழ்ச்சியல்ல.

இப்போதோ, *"நான் எ[ன்] நேசருடையவள். என் நேசர் என்னுடையவ[ர்]"* என்று அவள் கூறினதைக் காண்கிறோம். இத[ன்] பொருள் என்ன? "நான் அவருக்கு[ச்] சொந்தமாயிருப்பதால் அவரையே பிரிய[ப்] படுத்துவேன்; அவருடைய சித்தம் மட்டு[ம்] செய்வேன்; அவரையே தேடுவேன்" என்றுள்ள ஆதி அன்பின் நிலைக்கு மீண்டும், அவ[ள்] தன்னை முற்றும் அர்ப்பணித்துவிட்டதை[ப்] பொருள்படுத்துகின்றது. அவள் த[ன்] பிரதிஷ்டையைப் புதுப்பித்துக்கொண்டா[ள்]. அதாவது, அவள் தன் நேசரோடு திரும்ப[வு]ம் ஒன்றித்துவிட்டாள். அதனால்தான், *"நா[ன் என்] நேசருடையவள்; என் நேசர் என்னுடையவ[ர்]"* என்று உரிமையோடு கூறினாள்.

அன்பான விசுவாசிகளே! *"நான் எ[ன்] நேசருடையவள்; என் நேசர் என்னுடையவ[ர்]"* என்று நீங்கள் தேவனைச் சொந்தம் பாரா[ட்]...

...யுமா? நீங்கள் இயேசுவின்மீது ஆதியில் கொண்டிருந்த அன்பிலே நிலைத்துக் காணப்படுகிறீர்களா? இல்லையெனின், உங்களுடைய ஆதி அன்பைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். உங்களை மீண்டும் அவருக்கு முற்றும் அர்ப்பணியுங்கள். அவரைப் பிரியப்படுத்துங்கள். அவரது சித்தம் செய்யுங்கள். அவரைச் சொந்தம்பாராட்டி அவருக்கென்றே வாழுங்கள்.

"அவர் லீலிபுஷ்பங்களுக்குள்ளே மேய்கிறார்" (உன்.6:3).

தன்னை மீண்டும் பரிசுத்த பாதைக்குள் நேசர் நடத்திச் செல்வதை அவள் உணர்ந்தாள். அவள் தான் இழந்துபோன தன் நேசரைக் கண்டுபிடித்துவிட்டதால், அவரை முகமுகமாய்ப் பார்த்து, உரையாடும் நிலையை அடைந்துவிட்டாள்.

ஆம், இயேசு கிறிஸ்து நமக்குள் இடைவிடாது வாசம்பண்ணும் அநுபவம் ஒரு மேலான அநுபவம். அவர்மீதுள்ள நமது ஆதி அன்பைப் புதுப்பிப்போம். அவரோடு ஐக்கியப்பட்டு, பரிசுத்தமாக வாழ்வோம். அவரோடு எப்போதும் உரையாடிக் கொண்டிருப்போம்.

"என் பிரியமே! நீ திர்சாவைப்போல் சௌந்தரியமும், எருசலேமைப்போல் வடிவமும், கொடிகள் பறக்கும் படையைப் போல் கெடியுமானவள்" (உன்.6:4).

இப்புத்தகம் கவிதை வடிவில் எழுதப்பட்ட ஒரு காவியம் என்பதை ஏற்கனவே அறிந்துள்ளோம். இந்தக் காவிய நயத்தில் அநேக உண்மைகளைச் சபை விசுவாசிகள் கற்றறிய முடியும். (தொடரும்)

கிழியுண்ட திரை

பெண்கள் பகுதி

குல்ஷான் எஸ்தர்

சித்தப்பாவைத் தனது கௌரவத் தம்பிபோல் என் தந்தை கருதி நடத்தினார். தந்தையின் உதவியால் சித்தப்பா ஒரு சிறு மொத்த வணிகத்தை ஆரம்பித்தார். எனது தாயின் மரணத்துக்குப்பின் சின்னம்மா எங்கள் வீட்டுக்காரியங்களைக் கவனித்துக் கொண்டதோடு, என்னைப்பற்றிய பாரத்தையும் ஏற்று, கவனித்துக்கொண்டார்கள்.

சின்னம்மா, தனக்கு எங்கள் வீட்டில் கிடைத்த அடைக்கலத்துக்காக நன்றியோடு இருந்த நல்ல இதயமுடையவர்கள். ஆயினும் பாகிஸ்தான் தனிநாடாக ஆனபோது, தனது குடும்பத்தினர் அடைந்த மாபெரும் இன்னல்களை ...ணணி மனம் கொந்தளித்தார்கள்.

"ஐயோ! ஐயோ! பயங்கரம், என் சொந்தத் தம்பி என் கண்களுக்கு முன்பாகவே கொலைசெய்யப்பட்டதைப் பார்த்தேனே! ஓ, என் பட்டப்பாடுகளை நீங்கள் அறிந்ததில்லை. எங்கள் வீட்டைத் தீக்கொளுத்திப் போட்டனர்..." என்று மனவேதனையோடு அழுதுகொண்டு சொல்லுவார்கள்.

அவர்களது கவலைகள் நாளடைவில் கொஞ்சங்கொஞ்சமாக மாறின. தங்கள் மகள் படித்து சீக்கிரம் டாக்டர் ஆகிவிடுவாள், மகனும் படித்து பட்டாளத்தில் அதிகாரியாகிவிடுவான் என்ற நம்பிக்கையில் மன அமைதி பெற்றார்கள்.

இவைகள் கண்ணியமான பணிகள். ஆனால் நவீன கல்விமுறையால் பெண்களுக்குச் சிக்கல்கள் அதிகமாயின. நாகரிகமான பட்டணங்களில் வசிக்கும் படித்த பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் மிகக் கொஞ்சமே. ஆகவே, அவர்களது புதிய கருத்துக்கள் பழைய பாரம்பரியங்களோடு மோதின. பெண்களுக்குச் சீக்கிரம் கலியாணத்தை முடித்து, அவர்களை அவர்களது சொந்த இல்லங்களில் எவ்வளவு சீக்கிரமாகக்

குடியேற்றமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்தால் நல்லது என்பதே பண்டைய பாரம்பரியம்.

"நீ இதைப்பற்றி என்ன சொல்லுகிறாய், குல்ஷான்?" என்று சின்னம்மா கேட்டார்கள்.

நான் அரைத் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டவளாக, "ஒருவேளை அப்படித்தானிருக்கலாம்," என்றேன்.

"என் மகள் முதலாவது படிப்பை முடித்துத்தான் ஆகவேண்டும். அவள் டாக்டர் ஆகிவிட்டால் எவ்வளவு உபயோகம் தெரியுமா? அவளுக்குக் கலியாணம் ஆகி பிள்ளைகள் இருக்கும்போது அவர்களுக்கு வியாதி வந்தால் அவர்களைக் கஷ்டமில்லாமல் கவனித்துக்கொள்ளலாமே" என்றார்கள்.

இவ்விதமாக சின்னம்மா சுமார் ஒருமணி நேரத்துக்கு மேலாகவே பேசிவிடுவார்கள். நான் பதில்கொடுத்தாலும் சரி, கொடுக்காவிட்டாலும் சரி, அவர்களோ கலகலப்பாகப் பேசி ஆறுதலடைவார்கள்.

எரிச்சலூட்டும் கவலைகள் யாதும் என்னை நெருங்காமல் வீட்டுக் காரியங்கள் யாவற்றையும் சித்தப்பாவும், சின்னம்மாவும் கருத்தோடு கவனித்துக்கொண்டார்கள்.

எனக்கு ஏழு வயதானபோது சலிமா என் தாதியானாள். அவள் என்னைப் பராமரிக்கும் பொறுப்பை எடுத்தபோது அவளுக்கு 14 வயதுதான். அவள் கூச்சமுள்ள கிராமத்துப் பெண். அவளுக்கு மேலும் வயதானபோது அவளது குடும்பத்தைச் சேர்ந்த சீமா அவளுக்கு உதவி செய்பவளாக அமர்த்தப்பட்டாள்.

எங்கள் பங்களாவில் இன்னும் அநேக பணியாளர்கள் இருந்தனர். பங்களாவின் முன்வாயிலில் இருந்த அலுவலகத்திலிருந்து முன்ஷி, அப்பணியாளர்கள் யாவரையும் கண்காணித்து வந்தார். அனுதினமும் அப்பாவிடமிருந்து கட்டளைகளைக் காலையில் பெற்றுக்கொள்வார். கடைகளில் பொருட்கள் வாங்குவது, ஒவ்வொரு சிறப்பான குடு நிகழ்ச்சிக்கு ஏற்றவாறு விருந் ஏற்பாடுசெய்தல், அவசியமான பொருட்களு அங்காடிகளுக்கு உத்தரவிடுதல், கடிதங்க கட்டில் சேர்த்தல், விருந்தினர்கள் கண்ணிய வரவேற்கப்படுதல், செலவுகளுக்கான ப செலுத்துதல், தனது உக்கிராணம் ஒவ்வொரு வாரமும் முழு விவரம் கொடு போன்ற பணிகளை அவர் சிறப் செய்துவந்தார்.

வாயில் காப்பாளனாகிய சௌகிடா பணி குறிப்பிடத்தக்கது. விருந்தாளி எவரே வந்து வாயில் மணியை அடித்தால், வந் யார், வந்த காரியம் என்ன, ந தகுந்தவர்தானா? என்றறிந்து முன்ஷி தெரிவிப்பார். முன்ஷி அவ்விருந்தாளி வரவேற்று அவர் யாரைக் கா விரும்புகிறாரோ அவரிடம் அழைத் செல்வார்.

நான்கு தோட்டக்காரர்களுண் அவர்களில் டீட்டா தலைவன். செடி வாங்குவது, குழிகள் தோண்டுவது, நாட்டு செடித் தொட்டிகளைக் குளிர் காலத் தோட்டத்தில் வெயில்பட வைப் கோடைக்காலத்தில் நிழலுள்ள வராந்தா வைப்பது போன்ற எல்லா வேலைகளை டீட்டா மேற்பார்வை செய்தார். இரண்டா தோட்டக்காரர் டீட்டாவின் கட்டளைகள் யா செய்து முடிக்கப்படும்படி பார்த் கொள்ளுவார். மூன்றாவது தோட்டக்கா குழாய்க் கிணறுகள் சரியாக இயங் தோட்டத்துச் செடிகளுக்கும் நீரூற்றுகளுக் போதுமான தண்ணீர் செல்லுகிறதா என் கவனித்துக்கொள்வார். டீட்டாவின் மக புல்லை வெட்டி எல்லாவற்றை செம்மையாகப் பராமரித்துக்கொள்ளுவார்.

சமையல் வேலைகள் யாவற்றை சமையல்காரனும் அவனது உதவியாளனு கவனித்துக்கொண்டனர். நான் ஒருபோ சமையல் அறைக்குள் நுழைந்ததேயில்

...காரியின் பெயர் பீபி. எருமை மாட்டுப் ...லிருந்து ஒவ்வொரு நாளும் காலையில் வெண்ணெய் எடுத்துக்கொடுத்தாள். ...ராகி ஆகாரப் பொருட்களை மேஜைக்குக் ...ண்டுவந்து, சற்றியின் உதவியுடன் ...மாறினார். மற்ற வீட்டு வேலைகளையும் ...ர்கள் செய்தனர்.

இவ்விதமாக அதிகாரமும் பொறுப்பும் ...ப்பல கால்வாய்களாக ஓடியதால் காரியங்கள் வீட்டில் செவ்வையாய் நடைபெற்றன. எங்கள் நலன் பணியாளர்களின் நலனோடு ஒருங்கிணைந்தது. அவர்களில் பலர் எங்களோடு எங்கள் வளாகத்திலேயே குடித்தனம்செய்து, ஆடையும் ஆகாரமும் பெற்றதால் அதிகமான சம்பளம் யாருக்கும் கொடுக்கப்படவில்லை. வெளியிலிருந்த மக்கள் செய்ததுபோல் கடினமான வேலைகளும் அவர்களுக்கு இல்லையென்று நான் கருதினேன். (தொடரும்)

Youth Section

How can God use an imperfect person like me?

Philippians 3:12 says, *"Not that I have already attained, or am already perfected; but I press on that I may lay hold of that for which Christ Jesus has also laid hold of me."*

Once you have accepted Jesus Christ, you become His children. He takes control of your whole life. Through Him God enables you to do everything He asks, making the possibilities of service unlimited.

Have you let sin and shame discourage you? Perhaps you think God cannot use you because you are a broken vessel. The Almighty will mend you and make you fit for His holy services. Do not let your miserable feeling overshadow the truth. God is so great that He will restore you and use you to restore others. 1 John 1:9 renders; *"If we confess our sins, He is faithful and just to forgive us our sins and to cleanse us from all unrighteousness."*

God honours those who serve Him. Let me place before you a few prerequisites for maximum usefulness despite follies and frailties.

1. Conviction of inadequacy: John 15:5 says, *"... without Me you can do nothing. Except the branch abides in the vine, it cannot bear fruit."* Our sufficiency is of God. We should depend on Him totally. If we gratify the desires of the flesh, God cannot use us. We have to present our bodies a living sacrifice, holy, acceptable to God which is a reasonable service. What we need to know is not merely that God alone is sovereign but that God alone is sovereign but it is knowing and acknowledging that without the Holy Spirit we are incapable, unwilling and too weak to do what He asks of us. It is desirable that we are conscious of our limitations. God will efficiently make up our deficiences.

2. Purity of life: Do not confuse purity with confession. Purity is continual, immediate confession and repentance of sin. Paul's injunction to Timothy is, "... *keep thy-*

self pure" (1 Timothy 5:22). Sin corrodes purity. Paul exhorts us in Philippians 4:8, *"Whatever things are pure... if there is any virtue and if there is anything praiseworthy meditate on these things."* Psalm 12:6 says, *"The words of the Lord are pure words like silver tried in a furnace of earth, purified seven times."* If we read these tenets of truth habitually and ponder over them continually, our thoughts become pure. God demands that we keep ourselves blameless in this crooked, untoward generation. Purity is an essential ingredient in Christian character.

3. Prayer: Prayer is the greatest force on earth. With this incredible force, we can subdue the powers of darkness, an impediment to communion with God. When you willingly and genuinely acknowledge your inadequacy, you will consistently reach up to God in prayer. Jesus said in John 14:14, *"If you ask anything in My name, I will do it."* We need not worry about our inadequacy. Paul instructs us in Philippians 4:6, *"... in everything by prayer and supplications with thanksgiving let our requests be made known unto God."* At Corinth Paul met with opposition and blasphemy and felt a sense of inadequacy and insecurity. In that crucial time, God told him, *"Do not be afraid, but speak, and do not keep silent"* (Acts 18:9). Later Paul taught the people for one year and six months. God is your lifeline and you cannot live without Him.

4. Belief: Jesus tells us in Matthew 21:22, *"Whatever things you ask in prayer, believing, you will receive."* John 14:1 says, *"Let not your heart be troubled; you [be]lieve in God, believe also in Me."* It is [s]aid about Abraham that *"He did not waver [at] the promise of God and being fully con[]vinced that He had promised He was [a]ble to perform."* Belief in the promise[s w]ill make you adequate to meet the challen[ges] of life and help you to render meritori[ous] service to God. Belief dispels fear and sp[urs] you on to become a vessel of honour.

5. Engaged in service: Occupat[ion] with self accelerates the sense of inadequa[cy]. Being engaged in service is a magnific[ent] obsession. When Jesus' parents saw Je[sus] preaching in Jerusalem, He told them th[at] he must be about His Father's business. [To] Him ministry was His Father's business. [He] redeemed the time and went about do[ing] good. Preaching, teaching, healing and dr[iv]ing out demons were the avenues of His m[in]istry. Acts 10:38 renders thus: *"How G[od] anointed Jesus of Nazareth with the Ho[ly] Spirit and with power,... God was w[ith] Him."* I John 2:27 says, *"But the anoint[ing] which you have received from Him abi[des] in you, and you do not need that any[one] teach you; but as the same anointi[ng] teaches you concerning all things, ... y[ou] will abide in Him."* Use the power of t[he] Holy Spirit in your ministry. It will bring ri[ch] dividends.

Whether for ministry for one pers[on] or to many the power of God's Spirit chan[ges] lives. May He help you to rise above disco[ur]agement and disappointment and use yo[ur] influence the lives of others all for His gl[ory].

Blessed be the name of the Lord

தேவன் அது நல்லது என்று கண்டார்

"தேவன் அது நல்லது என்று கண்டார்" (ஆதி 1:10)

கிறிஸ்துவுக்குள் அன்பான என் சின்னஞ்சிறு செல்லங்களே! புதிய பள்ளி ஆண்டைக் கொண்டாடும் உங்களுக்கு எனது அன்பின் வாழ்த்துக்கள். புதிய வகுப்புகள், புதிய நண்பர்கள், புதிய பாடப் புத்தகங்கள் என்று புத்துணர்ச்சியுடன் ஜொலிக்கின்ற நீங்கள், புதிய கல்வியாண்டில் புதிய சாதனைகளைப் படைக்கவேண்டுமென்று ஆர்வம் கொண்டிருப்பீர்கள் அல்லவா? ஆனால் உடல் உறுப்புகளில் குறைபாட்டுடன் வாழ்வோர், அவர்களுக்கானச் சிறப்பு பள்ளிக்குக் கடந்துசெல்லும்பொழுது, அவர்கள் சந்திக்கவேண்டிய சூழ்நிலைகளைப் பற்றியும், சாதிக்கும் புதுமைகளைப் பற்றியும் நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? இக்கதையை வாசித்து இப்படிப்பட்டவர்களுக்காகத் தொடர்ந்து ஜெபியுங்கள்.

"மெர்சி செல்லம்! புறப்படலாமா?" என்று அன்பாக, அவளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, சைகையின்மூலம் வினவினார்கள் அவள் அம்மா.

"போகலாம்" என்பதுபோலத் தலையை அசைத்துக்கொண்டே, தன் இருக்கையிலிருந்து இறங்கி, தன் புத்தகப் பையோடு வாசலுக்கு ஓடினாள் மெர்சி.

மெர்சி ஐந்து வயது சிறுமி. நல்ல ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தவள். அக்குழந்தை ஒரு வயதானபோது, அவள் காது கேட்கும் திறன் இல்லாதவள் என்பதையும், வாய் பேசமுடியாத ஊமை என்பதையும் அவள் பெற்றோர் கண்டறிந்தனர். அந்த உண்மையை ஏற்றுக்கொள்ள இயலாமல் அதிர்ச்சிக்குள்ளாகியிருந்தனர் அவள் பெற்றோர். "ஏன் அவளுக்கு இந்த நிலை?" என்று தேவனிடம் முறையிடாத நாட்களேயில்லை. எந்தவொரு தேவைகளையும், பாரங்களையும் இருதயத்தில் சுமந்தவர்களாய் நாட்களைக் கழித்தனர்.

மெர்சி எப்பொழுதுமே துறுதுறுவென்று எதையாவது செய்து, அனைவரையும் மகிழ்விக்கும் குணமுடையவள். சிறுமியானாலும் தன் இயலாமையை நினைத்து வருத்தமே கிடையாது. காது கேளாதோர் பள்ளியில் படிக்கும் மெர்சி, தன் பள்ளியிலும் சகதோழிகள் மத்தியிலும் சிறந்து விளங்கினாள். அவளைப் போலவே மற்றச் சிறுவர் சிறுமிகளும் ஆசிரியர்களும் தங்கள் சைகைகளால் பேசினபடியால், அவளுக்குப் பள்ளி வாழ்க்கை மிகவும் விருப்பமானதொன்றாக அமைந்திருந்தது. ஒவ்வொரு நாளும் பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்தபிறகு, பள்ளியில் நடந்த அத்தனைக் காரியங்களையும் ஒன்றுவிடாமல் தன் சைகைகளின்மூலமாகத் தன் அம்மாவிடம் தெரிவித்து மகிழ்வாள்.

அன்றும் அவ்வாறே பள்ளிக்குச் சென்ற மெர்சிக்கு ஒரே அதிர்ச்சி. எப்பொழுதும் சிரித்துக்கொண்டிருக்கும் அவள் ஆசிரியையின் முகத்தில் புன்முறுவலுக்கு மாறாகக் கவலைக்கோடுகள் காணப்பட்டன. பிள்ளைகள் யாதொன்றையும் புரிந்துகொள்ளமுடியாமல், ஒருவரையொருவர் வினாவுவதுபோல் சைகை செய்தனர்.

அப்பொழுது அந்த ஆசிரியை, சைகைகளினாலேயே வேகமாகப் பேசத் தொடங்கினார்கள். அன்று மதியம் அப்பள்ளிக்கென்று நியமிக்கப்பட்ட புது ஆய்வாளர் பள்ளியைப் பார்வையிட வருவதாகவும், அவர் மிகவும் கண்டிப்பானவரும் குறைகளை எளிதில் கண்டுபிடித்துவிடுவாரென்றும் கூறினார்கள். மேலும், அவர்

பிள்ளைகளின் பெற்றோரையும் காணவேண்டும் என்று கூறியதால், பெற்றோருக்கும் தொலை பேசியின்மூலம் அழைப்புக் கொடுத்திருப்ப தாகவும் கூறினார்கள்.

இதைக்கேட்ட பிள்ளைகள் பயத்துடன் அமர்ந்திருந்தனர். அழைப்புக்கிணங்கி வந்திருந்த பெற்றோரும் தங்களுக்கென்று நியமிக்கப்பட்ட இடங்களில் அமர்ந்திருந்தனர். அரைமணி நேரம் கழித்து, பள்ளியின் தலைமை ஆசிரியருடன், வகுப்பறையினுள் நுழைந்தார் ஆய்வாளர்.

பிள்ளைகளைச் சோதிக்கும்வண்ணம் அநேக கேள்விகளை வகுப்பு ஆசிரியையிடம் கேட்டார் அவர். ஆசிரியரும் அவற்றைத் தன் சைகைகளின்மூலம் பிள்ளைகளைக் கேட்க, பிள்ளைகளின் பதில்களை அப்படியே கரும்பலகையில் எழுதினார்கள். ஆய்வாளரும் திருப்தியாகத் தன் தலையை அசைத்தபோது, எல்லோரும் நிம்மதி பெருமூச்சுவிட்டனர்.

ஆனால் திடீரென்று ஆய்வாளர், "டீச்சர்! இப்பொழுது நான் கேட்கும் கேள்வியை, அவ்விதமே பிள்ளைகளுக்கு உங்களது சைகைகளின்மூலம் விளக்குங்கள்" என்று அதிகாரத் தோரணையில் கூறினார்.

"கடவுள் மற்ற எல்லாப் பிள்ளைகளையும் நேர்த்தியாகப் படைத்திருக்க, உங்களை மாத்திரம் ஏன் காது கேளாமலும் வாய்பேசாமலும் உருவாக்கினார்?" என்று கேட்டார்.

இக்கேள்வியை எதிர்பாராத ஆசிரியை ஆய்வாளரின் கேள்வியைத் தனது சைகைகளின் வாயிலாக மொழிபெயர்க்க, பிள்ளைகளின் பிஞ்சு உள்ளங்கள் நெகிழ்ந்தன. அத்தனை மாணவ மாணவியரின் கண்களும் குளமாயின. அவர்கள் முகங்களில் காணப்பட்ட உணர்ச்சிகளின் பிரதிபலிப்பு, பெற்றோரது உள்ளங்களையும் அசைத்தது. வேதனையில் துடித்த பிள்ளைகள் பதில் சொல்லத் தெரியாமல் திகைத்தனர்.

அப்பொழுது, ஆவியானவர் மெர்சியோடு இடைப்பட்டார். அவள் ஓய்வுநாளில் படித்த ஒரு வசனத்தை அவர் ஞாபகப்படுத்தினார். மெர்சி பயத்துடன் தன் இருக்கையிலிருந்து எழுந்து, தன் கண்களைத் துடைத்தவ[ள்] வேதத்தை எடுத்து, தன் சைகைய[ால்] அதற்குரிய வசனத்தைக் காட்டினாள்.

ஆச்சரியத்தோடு அவளைக் க[ண்ட] ஆசிரியர் தன் கரும்பலகையில், "தேவன் அ[து] நல்லது என்று கண்டார். ஆதியாகமம் 1:1[0]" என்று எழுதினார்.

அந்நேரத்தில் தலைமை ஆசிரியரை[யும்] ஆய்வாளரையுங்கூட பொருட்படுத்தாம[ல்] பிள்ளைகள் அனைவரும் மெர்சியின் அரு[கே] ஓடிவந்து அவளைப் பாராட்டினர். பெற்றோ[ரும்] அவளைப் பாராட்டி, தங்களுக்குள் மகிழ்ந்த[னர்].

மெள்ள, ஆய்வாளரும் மெர்சியின் அரு[கே] வந்து, அவளது முதுகைத் தட்டிக் கொடுத்த[ார்]. அந்தப் பிள்ளைகளைச் சோதிப்பதற்காக[வே] தான் அந்தக் கேள்வியைக் கேட்டதாக[வும்] மெர்சியின் பதில் அவரை மிகவும் கவர்ந்துவிட்[டது] எனவும் கூறினார். இப்பள்ளிக்காக அரசாங்கத்தி[டம்] அவர் பரிந்துரை செய்யப்போவதாக[வும்] மட்டுமன்றி, தன்னால் இயன்ற உதவியை[த்] தானே செய்யப்போவதாகவும் அவர் உறு[தி] கூறினார். அனைவரின் முகங்களும் மலர்ந்த[ன].

அந்நாள்வரையில், "ஏன்?" "ஏன்?" என்ற கேள்வியோடு வாழ்ந்துகொண்டிரு[ந்த] மெர்சியின் பெற்றோருடைய சந்தேகத்திற்கு[ம்] தேவன் விளக்கமளித்தாரென்பதை நினைத்[து] அவருக்கு ஆனந்தத்தோடு நன்[றி] செலுத்தினார்கள்.

என் அருமைப் பிள்ளைகளே! நீங்களு[ம்] "நான் ஏன் பிறந்தேன்? நான் ஏன் வியாதியோ[டு] வாழவேண்டும்? நான் ஏன் இப்படிப்பட்[ட] சூழ்நிலைக்குத் தள்ளப்படவேண்டும்?" என்னுமாறுள்ள கேள்விகளைத் தேவனிட[ம்] அடிக்கடியாகக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள[ா]? கவலைப்படாதீர்கள்! நீங்கள் சூழ்நிலைகளா[ல்] ஆளப்படமுடியாது. "தேவன் அது நல்ல[து] என்று கண்டார்." ஆகவே, பொறுமையோ[டு] காத்திருந்து, ஆசீர்வாதத்தைப் பெற்று[க்] கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை[ ] ஆசீர்வதிப்பாராக.

சாட்சிப்பகுதி

கர்த்தர்மீதுள்ள விசுவாசம்

"பிரபுக்களை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்" (சங்கீதம் 118:9).

என் பெயர் ஆன்ட்ரூ அய்யாசாமி. எனக்கு வயது 51. கடந்த 14.2.2010 ஓய்வு அன்று, தேர்வு எழுதும் மாணவர்களுக்கான சிறப்பு ஜெபத்தைத் தலைமைப்போதகர் சாம் ஆபிரகாம் அவர்கள் ஏறெடுத்தார்கள். அவ்வமயம் தேர்வு எழுதும் மாணவர் அனைவரும் எழுந்து நின்றனர்.

அலுவலகப் பதவி உயர்வுக்கான ஒரு தேர்வை, 21.2.2010 அன்று நானும் சந்திக்க வேண்டிய நிலையிலிருந்தேன். ஆகவே, நானும் எல்லா மாணவரோடும் எழுந்து நின்றேன். சகவிசுவாசிகள் அதிசயமாக என்னைக் கூர்ந்துநோக்கினர். ஏனெனில், நான் வயது முதிர்ந்தவனன்றோ? இவ்வித பதவி உயர்வுக்கான தேர்வில் தேர்ச்சிபெற, அதிகாரம் படைத்த பல பிரபுக்களை இதற்கு முன்னர் நம்பித் தோற்றுப்போனேன். அநேக அலுவலக அதிகாரிகளும் எனக்குப் பதவி உயர்வு கிடைப்பது அரிது என்றே கூறினர்.

ஆயின், அன்று போதகரோடு இணைந்து கர்த்தரை நம்பி எனது தேர்வுக்காக, சபையில் ஜெபித்தேன். தேர்வை நன்முறையில் எழுதினேன். எனது எல்லா மேலதிகாரிகளின் எண்ணத்திற்கும் சித்தத்திற்கும் மாறாக, 10.3.2010 அன்று எனக்குப் பதவி உயர்வு கிடைத்தது.

"கர்த்தர் உன் தலையை உயர்த்துவார்" என்று போதகர் தந்த வாக்குத்தத்தத்தின்படி, என் தலை எல்லா அலுவலகர்கள் மத்தியிலும் உயர்த்தப்பட்டது. வாக்குத்தத்தம் நிரூபிக்கப்பட்டது. எல்லோர் முன்னிலையிலும் நான் சாட்சியாக நின்றேன். எல்லாத் துதி, கனம், மகிமையையும் இயேசுவுக்கே செலுத்துகிறேன்.

ஆன்ட்ரூ அய்யாசாமி

அறிவிப்பு

II Timothy 2:15 - Study, Show and Speak the Word

அப்போஸ்தல கிறிஸ்தவ சபை வேதாகமப் பயிற்சிப்பள்ளி

ஊழிய அழைப்புப் பெற்றுள்ளவர்கள் இறையியல் பயிற்சி பெறுவதற்கான காலம், ஜூலை 2010-ஜூன் 2011 வரையாகும். அதற்குரிய விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன.

தகுதி	: 10 ஆம் வகுப்பு
பயிற்சிக் காலம்	: ஒரு வருடம்
விண்ணப்பம் அனுப்ப கடைசி நாள்	: 15.07.2010
பயிற்சி மொழி	: தமிழ்

விண்ணப்பதாரர் தங்களுடைய ஞானஸ்நானம், அபிஷேகம் மற்றும் ஊழிய அழைப்பு, இவை உள்ளடங்கிய சாட்சியை ஒருபக்க அளவில், தங்களது சொந்தக் கையெழுத்தில் எழுதி அனுப்பவேண்டிய முகவரி:

முதல்வர்,
அப்போஸ்தல கிறிஸ்தவ சபை
வேதாகமப் பயிற்சிப் பள்ளி,
111, பிரிக்கிலின் சாலை, புரசைவாக்கம்,
சென்னை-600 007.

FOR YOUR KIND ATTENTION

Our New Website Address:

www.acaprayerhouse.co.in

Pastor's New E-mail ID:

pastor@acaprayerhouse.co.in

ACALM's New E-mail ID:

acalm@acaprayerhouse.co.in

சபையின் செய்திகள்

அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையின் விடுமுறை வேதாகமப் பள்ளி

அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையில் 2010, ஏப்ரல் மாதம் 26 ஆம் நாள் துவங்கி மே மாதம் 9 ஆம் நாள்வரை, மொத்தம் பத்து நாட்கள் விடுமுறை வேதாகமப் பள்ளி நடைபெற்றது. இப்பள்ளியில் விசுவாசிகளின் பிள்ளைகளும், புறஜாதியாரின் பிள்ளைகளுமாகச் சேர்ந்து, சுமார் 550 மாணவ மாணவிகள் கல்வி பயின்றனர்.

ஆரம்ப வகுப்புமுதல் உயர்வகுப்பு வரை, தமிழ், ஆங்கில மொழிவாயிலாக, மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கப்பட்டது. இவ்வாண்டு விடுமுறை வேதாகமப் பள்ளிப் பாடத்தின் தலைப்பு, "பாக்கியவான்கள்" என்பதாகும். இயேசுவுக்குச் சேவைசெய்யும் நோக்கத்தோடு 65 ஆசிரியர்கள், "பாக்கியவான்கள்" என்றுள்ள தலைப்பில் மாணவர்களுக்குப் பாடத்தைப் பயிற்றுவிக்க முன்வந்தனர்.

4.5.2010 அன்று இப்பள்ளியில், "அன்பு விருந்து" ஒன்று நடைபெற்றது. அப்போது அங்குப் பயின்ற மாணவ மாணவிகள் ஒருவரோடொருவர் தங்களது உணவைப் பகிர்ந்து உண்டு, தாங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நிரூபித்தனர்.

இப்பள்ளியின் பாடத்திட்டத்தினால் இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியை அந்நிய பாஷை அடையாளத்துடன் பெற்றுக்கொண்ட மாணவ, மாணவிகள் 85 பேர் ஆவர்.

இப்பள்ளி நாட்களில் ஓவியம், கட்டுரை, பாடல்கள், போதித்துக்காட்டுதல் ஆகிய இவற்றிற்கான போட்டிகள் மாணவர்களிடையே நடைபெற்றன. சிறந்த பரிசுகள் போட்டியில் வென்ற மாணவர்களுக்கும், வகுப்புகளைச் சீரியமுறையில் நடத்திக் காட்டின ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டன.

மே 9 ஆம் நாள், இப்பள்ளியின் நிறைவு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. "பாக்கியவான்கள்" என்றுள்ள தலைப்பின் அமைந்த குறுநாடகங்கள், பாடல்கள், நடனங் ஆகியவற்றை மாணவ மாணவிகள் நடப்பித் கொண்டாடி மகிழ்ந்தனர். இவ்வாறு, விடுமு வேதாகமப் பள்ளி சீரும் சிறப்புமாக முடிவுற் கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

செய்திகள்

வடக்கு கரோலினா மாநில பல்கலை கழகத்தில் 18 நாட்கள் ஆய்வு நடத்தப்பட் அதுகுறித்து ஆய்வுக் குழு பேராசிரியர் ஸ்டல் கூறியது:

"வாழ்நாள் முழுவதும் எலு ஆரோக்கியம் நீடிக்கச் செய்வதில் கால்சியத் பங்குபற்றி ஆராயப்பட்டது. பன்றிக்குட்டிக இந்த ஆய்வுக்கு பயன்படுத்தினோம். 24 பன் குட்டிகள் தேர்வுசெய்யப்பட்டு இரண் குழுக்களாகப் பிரிக்கப்பட்டன. ஒரு குழு உணவில் கால்சியம் கூடுதலாக சேர்க்கப்பட்

மற்றொரு குழுவில் இருந்த பன் குட்டிகளுக்குக் கால்சியம் குறைவான உண அளிக்கப்பட்டன. 18 நாட்களுக்குப் பிறகு பன்றிக்குட்டிகளின் எலும்பு ஆரோக்கி பரிசோதிக்கப்பட்டது. கால்சியம் அதிகம் கொ உணவைச் சாப்பிட்டவற்றைவிட, குறைவா சாப்பிட்ட குட்டிகளின் எலும்பு அடர் குறைவாக இருந்தது.

அத்துடன், எலும்புக்குள் இருக் மஜ்ஜையில் ஸ்டெம் செல்கள் கொழுப் மாறி இருந்தன. கால்சியம் செறிந்த உ சாப்பிட்ட குட்டிகளின் எலும்பு மஜ்ஜை எலும்பை உறுதியாக்கும் செல்களாக மா யிருந்தன. எனினும், பெரியவர்களின் ரத்தத் கால்சியத்தை முறைப்படுத்தும் வைட்ட 'D'யின் ஹார்மோன்கள்குறித்து இரண் குழுக்களின் ரத்தப் பரிசோதனையில் எ மாற்றமும் தெரியவில்லை.

குழந்தை பிறந்ததில் இருந்து கால்சி மினரல்கள் உடலில் சேர்ந்தால் குழந்தைக எலும்பு வளர்ச்சி சிறப்பாக இருப்பதுடன், வாழ் முழுவதும் எலும்பு ஆரோக்கியம் நீடிக்க உ என்று ஆய்வில் தெரியவந்துள்ளது" என ஸ்டல் தெரிவித்தார். (தினகரன் 15-05-20

நீ சோதிக்கப்படும்போது

நீ கேட்க நேர்ந்த அவதூறுகளை மறந்திடு,
அவசரமாகப் பேசின அன்பற்ற வார்த்தைகளை மறந்திடு;
சண்டையையும், அதற்குரிய காரணத்தையும் மறந்திடு,
அச்சம்பவத்தை முற்றும் மறந்திடு; ஏனெனில்,
(சோதனைக்குட்படாதிருக்க)
மறப்பதுதான் ஒரே வழி.
நேற்றைய புயலை மறந்திடு.
எவ்விடத்திலும் புன்னகைக்க மறக்கும்
மனிதனது கடுகடுத்த முகத்தை மறந்திடு.
நீ ஒரு கோடீஸ்வரன் அல்ல என்பதை மறந்திடு.
உன் தலைமுடியிலுள்ள நரைக்கோடுகளை மறந்திடு;
குளிர்ந்திருக்கும் காபியை மறந்திடு.
எதிர்த்துத் தாக்க மறந்திடு, வசைபாட மறந்திடு,
குழாய் சீரமைப்பவனின் அதிகக்கூலியை மறந்திடு,
மருத்துவரின் பெருந்தொகைச் சீட்டை மறந்திடு,
பழுதுபார்ப்பவனையும், அவனது வழிகளையும் மறந்திடு,
குளிர்காலக் கடுங்காற்றின் நாட்களை மறந்திடு.
ஆனால்,
அந்நாளின் முடிவில் இறைவனை மறவாதே.

Reg.Number TN/CCN/385/09-11. Licence to the post under WPP No.TN.CCN.85/09-11
Regd.Under Regis.of News paper for India No. 1295/57, Posting date 29th & 30th of every m
Date of Publication: monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrica Channel, Egmore, Chennai - 600 008.

Book - Rs.5/-

1. உங்கள்மீதுள்ள அபிஷேகம்
2. விசுவாசிகளின் சாட்சி
3. சாட்சிகள் 60
4. உத்தம சாட்சிகள்
5. இயேசுவின் அன்பு (சாட்சிகள்)
6. எஸ்தர்
7. இயேசு கிறிஸ்து மாறாதவர்
8. ஒளி வீசும் சாட்சிகள்
9. முரண்பாடுகள்
10. இரயில் நிலையத்தில் இயேசு என்னைக் குணமாக்கினார்
11. இயேசு செய்த அற்புதங்கள் (சாட்சிகள்)
12. Jesus met me in jail
13. எனது அநுபவங்கள்
14. My experiences

Book - Rs.10/-

15. அநாதி கிருபை
16. கர்வாலி மரம்
17. பக்திவிருத்தி உண்டாக்கும் சாட்சிகள்
18. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்
19. நீதிமான்கள்
20. கிறிஸ்துமஸ் செய்திகள்
21. இயேசு உயிர்த்தெழுந்தார்
22. நீதியின் சூரியன்
23. பரதேசிகளாகிய நாம்
24. கிறிஸ்தவ குடும்பம்
25. நித்திய பிரதான ஆசாரியர்
26. சபை சபைதானா?
27. யாக்கோபிலிருந்து உதிக்கும் நட்சத்திரம்
28. புத்தாண்டு தேவ செய்திகள்
29. விழித்திரு
30. சிலுவைக்கு அப்பால்
31. வணக்கம்
32. இனிமேல்
33. இரட்சிப்பின் சாட்சிகள்
34. ஜீவனுள்ள சாட்சிகள்
35. அற்புத சாட்சிகள்
36. சாட்சிகள்
37. எரி நரகத்திற்கு தப்பினேன்
38. மாபெரும் மாற்றம்
39. நன்றியுள்ள சாட்சிகள்
40. கல்லூரியில் அற்புதங்கள்
41. நற்செய்தி கதைகள்
42. தீப ஒளி
43. வழிக்காட்டும் கதைகள்
44. அந்தக் கடிதங்கள்
45. அந்த மயில்கள்
46. கனமான ஊழியம்
47. வெளிச்சம்
48. ஆத்தும நேசர்
49. மேகம்
50. ஐக்கியம்
51. கொடி
52. இன்னும் சந்தேகமா?
53. கர்த்தருடைய பிள்ளைகள் அனுதினம் அறிக்கை செய்யவேண்டியவை
54. இயேசுவே மெய்யான ஒளி
55. மேய்ப்பரின் கடிதங்கள்
56. ஆபிரகாமின் தேவன்
57. இரட்சிப்பின் படிகள்
58. கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்
59. ஒருவருக்கொருவர்
60. பேசும் தெய்வம்
61. மருத்துவமனையில் அற்புதங்கள்
62. முதலாம் ஆதாம்
63. ஆசீர்வாதங்களின் திறவுகோல்
64. நீரே என் மேய்ப்பர்
65. தேவ ஊழியம்
66. உத்தம ஊழியம்
67. Eternal Grace
68. The Star
69. The New Year
70. Spiritual Questions
71. The Timely Warning
72. The Blessing
73. Your response to the Cross
74. The power of Prayer
75. Springs in the valley
76. A Narrow Escape from Hell

Book - Rs.15/-

77. ஏழு வார்த்தைகள்
78. இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்
79. இயேசு கூறின உவமைகள்
80. அதிசயமான தேவ கிருபை
81. Amazing Grace of God
82. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-4

Book - Rs.20/-

83. என் நேசரின் சத்தம்
84. தேவனுடைய வாக்குத்தத்த செய்திகள்
85. வாக்குத்தத்தச் செய்திகள் 20
86. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-1
87. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-2
88. ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் வாழ்க்கை
89. நம்மை ஆசீர்வதித்து நடத்துகிற கர்த்தர்
90. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள்-1
91. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள்-2
92. ஒருவருக்கொருவர்
93. Successful Ministers of
94. Messages of God's bless P
95. Messages of God's bless P

Book - Rs.25/-

96. A Good Soldier of Jesus
97. வாக்குத்தத்தச் செய்திகள் 20
98. வாக்குத்தத்தச் செய்திகள் 20
99. வாக்குத்தத்தச் செய்திகள் 20
100. வாக்குத்தத்தச் செய்திகள் 2
101. வாக்குத்தத்தச் செய்திகள் 2
102. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 3
103. தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள்
104. ஜெபத்தின் வல்லமை

Book-Rs.30/-

105. நல்ல போர்ச்சேவகன்
106. ஆவிக்குரிய தேவசெய்திகள்

Book-Rs.100

107. உன்னதப்பாட்டு

(போதகர் எம்.கே. சாம் சுந்தரம் 1997 ஆம் ஆண்டு வேத போதித்து வந்த உன்னத புத்தகத்தின் தொகுப்பு)

வேண்டுவோர் விரும்பும் நூல்களை எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி.

24hrs Prayer line:
26625815

Herald of Deliverance

Edited and published by Pastor.M.K.Sam Sundaram on behalf of ACA Literature Ministry
111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.
Phone: 044-26622775

Administrative office: ACA Literature Ministry, Post Box No.3504, Chennai -600007.
Phone: 044-26622021

Printed by Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street, Vadapalani, Chennai -600 026. Phone: 24728885/Cell 9841429079